# சுதந்திரன்

SUTANTIRAN

தொலைபேசி 23411 விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, கார்த்: 16; ஜுல்கஃ 16 (1-12-74) ஞாயிறு புத்தகம் 28 இதழ் 15


## கோழி அடித்துச் சாப்பாடு போட்டால் 5000 ரூபா! ஆடு அடித்து சாப்பாடு போட்டால் 10,000 ரூபா!

"திருமலை மாவட்டத்திற்கு 68 லட்ச ரூபா ஒதுக்கீடு செய்த போதிலும் 48 லட்ச ரூபாதான் செலவிடப்பட்டது. அவ்விதம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 48 லட்ச ரூபாவும் அரை குறை வேலைகளுக்கே செலவிடப்படுகின்றது. எமது மாவட்ட அரசியல் அதிகாரி தன் விருப்பப்படி பணத்தை செலவிடுகின்றார். அவருக்கு கோழி அடித்து சாப்பாடு போட்டால் 5000 ரூபாவும் ஆடு அடித்து சாப்பாடு போட்டால் 10,000 ரூபாவும் அந்தக் கிராமத்தின் அபிவிருத்திக்கு வழங்குகிறார்."

—தேசியப் பேரவையில் தங்கத்துரை பா. உ.

# தமிழ் ஈழத்தை எங்களிடம் ஒப்படையுங்கள்!

## அயல்நாடு என்றமுறையில் உங்களுடன் நட்புடன் வாழுவோம்!

### தேசியப்பேரவையில் சிந்தனைச் சிற்பி முழக்கம்!

"சிங்களவர்களையும் தமிழர்களையும் தனித்தனியாக சுய உரிமையோடு வாழ விடாமல்—சுய ஆட்சியோடு வாழ விடாமல்—ஆங்கிலேயர் அன்றிட்ட விலங்கு இன்றும் இருக்கிறது. அது நீங்கினால்தான் இரண்டு நாடுகளும் சுதந்திரமடைந்த நாடுகளாக—ஆங்கிலேயருடைய கடைசி அம்சம் நீங்கிய நாடாக இயங்கமுடியும்! தமிழ் ஈழத்தை எங்களிடம் ஒப்படைத்துவிடுங்கள்! நாங்கள் ஒரு அயல் நாட்டவர் என்ற முறையில் உங்களுடன் நட்புறவாக ஒற்றுமையுடன் வாழவே விரும்புகிறோம்!"

—இவ்வாறு தேசிய அரசுப்பேரவையில் வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது பேசிய கோப்பாய் தொகுதிப் பிரதிநிதியும், தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளருமான சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் சுதந்திர முழக்கமிட்டார்!

அவர் அங்கு பேசியதாவது:—

எனது நண்பர் யாழ்ப்பாணப் பிரதிநிதி ஒரு விட

—4-ம் பக்கம் பார்க்க



## ● பிரதமருக்கு பெரு வெற்றி!

## தேசிய முதலாளித்துவத்திற்கு முன் டாக்டர் என். எம். சரணடைந்தார்!

சோசலிசப் பயணத்தில் தங்குமடத்திற்குஇடமில்லை; ஒரு சில நிறுவனங்களை மட்டும் தேசிய மயமாக்கிவிட்டு மீதியை முதலாளிகளிடம் விட்டுவிடுவதுமுற்போக்கோ சோசலிசமோ ஆகமுடியாது; முற்போக்கு நடவடிக்கைகளுக்கு விரோதமானவர்கள் ஐக்கிய முன்னணியை விட்டு வெளியேறிவிடலாம்!" என்றெல்லாம் பெரிய வீராதி வீரர் போலக் கர்ச்சித்த டாக்டர் என். எம். பெரேரா, இறுதியாக இப்போது சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள தேசிய முதலாளிகளிடம் சரணடைந்துவிட்டார்! அவர்களது கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்துவிட்டார் என்பதை அவர் பாட ஆரம்பித்திருக்கும் புதிய சோசலிச ராகம் எடுத்துக் காட்டுகிறது—இதோ டாக்டர் என். எம். கூறுகிறார்!

"ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக்கு வந்தது சோசலிசத்தைக் கொண்டுவரத்தான். ஆனால் இரவோடிரவாக சோசலி

—5-ம் பக்கம் பார்க்க

## மலையகத் தமிழர்கள் கள்ளத்தோணிகளாம்!

### அருளம்பலத்தின் திமிர்!

ஈழத் தமிழினம் முழுவதையுமே "கள்ளத் தோணிகள்" என்று ஈனச் சிங்கள வெறியர்கள் சிலர் கேவலமாக பேசி வரும் இந்நாட்களில் ஆளும் சிங்களக் கட்சியுடன் சேர்ந்து தமிழினத்தைக் காட்டிக் கொடுத்துவரும் யாழ்ப்பாண அடிவருடிகளில் ஒருவரான நல்லூர் அருளம்பலம் தனது சிங்கள எசமானர்களை சந்தோஷப் படுத்துவதற்காக மலையகத் தமிழ் மக்களை "கள்ளத் தோணிகள்" என்று குறிப்பிட்டுநாத்துடுக்குடன் தேசிய அரசுப்பேரவையில் பேசியிருக்கிறார்!

அது மட்டுமன்றி மலையகத்தில் பட்டினிச்சாவுகள் ஏற்பட்டு மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் நாள் தோறும் செத்துவரும் பரிதாப நிலையை—மேலும் மூடி மறைக்க முடியாத காரணத்தினால்—அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களான ஜனுப் ஏ. அசீசும், சிங்களவரான மஸ்கெலிய பா. உ. ஆரியதாசாவும் தேசிய பேரவையில் அம்பலப்படுத்தியிருக்கும் அதே வேளையில்

—5-ம்பக்கம் பார்க்க

## கொழும்பில் வெள்ளி விழா ஏற்பாடுகள் தீவிரம்!

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 25வது ஆண்டு (வெள்ளி விழா) விழாவின் முதலாவது நிகழ்ச்சியை கொழும்பில் நடத்துவதற்கு தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளை சகல ஏற்பாடுகளையும் துரிதமாக கவனித்துவருகிறது. இந்த விழா சம்பந்தமான நிகழ்ச்சிகள் சென்றவாரம் கொழும்பில் திரு. மு. திருச்செல்வம் கியூ. சி. தலைமையில் நடைபெற்ற கொழும்பு கிளைசெயற்குழுக் கூட்டத்தில் பூர்த்திசெய்யப்பட்டன.

வில்லுப்பாட்டு நிகழ்ச்சியொன்றும் இவ்விழாவின் இறுதியில் இடம்பெறவிருக்கிறது. விழா தமிழரசுக்கட்சியின் தொடக்க நாளான டிசம்பர் 18ம்திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது.

## சென்னையில் விசேட பொலீஸ் பாதுகாப்புடன் சிங்கள அமைச்சர் நடமாட்டம்!

சென்னை மாநகரத்திற்கு அண்மையில் சென்றிருந்த சிங்கள அமைச்சர் ஒருவருக்கு சிறப்பு பாதுகாப்பு சென்னை பொலிசாரால் அளிக்கப்பட்டது.

இலங்கைத் தொழில் அமைச்சர் அண்மையில் சென்னைக்கு சென்றிருந்த போது, சென்னையிலுள்ள பல்வேறு கடைகளுக்கும் விஜயம் செய்தபோதிலும் அண்மையில் குண்டுவீச்சுக்கு இலக்கானதாகக் கூறப்படும் சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்துக்கும்,

—5-ம் பக்கம் பார்க்க

## முருங்கனில் இளைஞர் பேரவையின் இணைப்பு கூட்டம்!

இலங்கையின் சகல பகுதிகளையும் உள்ளடக்கிய தமிழ் இளைஞர் பேரவையின் இணைப்புக் கூட்டமொன்று 28, 29, 30ம் திகதிகளில் முருங்கனில் நடைபெறவுள்ளது. பேரவையின் அமைப்புத் திட்டம் இக்கூட்டத்தில் உருவாக்கப்படுவதுடன் முக்கியமானபலதீர்மானங்களும் அங்கு நிறைவேற்றப் படும்என்றுபேரவைசெயலாளர் திரு. அ. வரதராசன் அறிவித்துள்ளார்.

அத்துடன் பத்து இடங்களில் கருத்தரங்குகளையும் மன்னார் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் தமிழ் இளைஞர் பேரவை நடத்துகிறது.

## முருங்கனில் பௌத்த ஆதிக்க திணிப்பு!

மன்னாரின் நுழைவாயிலான முருங்கனில் உள்ள செம்மண்தீவு என்னும் கிராமத்தில் வாழ்ந்துவந்த அப்பாவி இந்தியத் தமிழ் மக்களுக்கு ஆசைகாட்டி, அவர்கள் குடியிருந்த காணிகளிலிருந்து அவர்களை விரட்டிவிட்டு அக்காணிகளில் பௌத்த ஆலயம் ஒன்றை பிக்கு ஒருவர் நிறுவியுள்ளாராம்.

அந்த ஏழைத்தமிழ் மக்களுக்கு அவர் காட்டிய ஆசை என்ன தெரியுமா? "உங்கள் அனைவருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுத் [illegible] கிறோம் — நீங்கள் [illegible] ப் பிரஜைகளாக [illegible] ம் சிங்க

—5-[illegible] பார்க்க

## சிங்களக் கிராமத்திற்கு பணம் உண்டு! தமிழ்க் கிராமத்திற்கு மட்டும் கைவிரிப்பு!

### தமிழ் அமைச்சரின் நிர்வாகத்திலேயே பாரபட்சம்!

வவுனியாத் தொகுதியிலுள்ள சாஸ்திரி கூளாங்குளத்திற்கு தொலைபேசி இணைப்பதற்கு அரசாங்கம் ரூபா 27,000 முன்பு ஒதுக்கியிருந்தது. பின்பு நிதி தட்டுப்பாடு என்று சாட்டுக்கூறி அதை ரூபா 16000 ஆகக் குறைத்துக் கொண்டதாம்! இத் தொகை தந்திக் கம்பிகளுக்கு ஏற்படும் செலவை மட்டுமே ஈடு செய்யப் போதும் என்றும் மிகுதி வேலையைப் பொது மக்கள் சிரமதான மூலம் செய்ய வேண்டுமென மந்திரி கேட்டிருந்தாராம்.

பாவம் அப்பாவி ஏழை விவசாயிகள், சில தோழர்களில் வேண்டுகோளுக்கு இணங்கி 20, 30 மைல் காடுகளில் அலைந்து கம்பங்கள் வெட்டி சுமந்து டிராக்டர்களின் ஏற்றி வந்து [illegible] அருகே உள்ள காடுகளை வெட்டி துப்பரவு செய்து கிடங்குகள் கிண்டி கம்பங்கள் நாட்டினார்களாம். நாட்டப்பட்டகம்பங்களின் கம்பிகளைப் பூட்டியது மட்டும் தான் அரசாங்கத்தின் வேலை. இதை ஆரம்பித்து வைக்கத் தான் மந்திரி குமாரசூரியர் வவுனியா வந்தார்.

மந்திரியை வரவேற்க 100க்கு மேற்பட்டவர் [illegible]

—5-ம் பக்கம் பார்க்க

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுவை நிறைந்த சுற்றுலா (ii)

கோவை-மகேசன்

இனிமையான அந்தக் காலைப் பொழுதில் நகுலேசுவரத்தில் எழுந்த நாதசுரகான ஓசை நமக்குப் புதிய சுகானுபவத்தைத் தந்திட— பேருந்தைவிட்டு இறங்குகிறோம்! அறிஞர் பெருமக்கள், ஆராய்ச்சியாளர்கள் அனைவரையும் ஆலயக் குருக்கள், தாம் நேரடியாகவே வந்து அழைத்துச்செல்லுகிறார்.

மலர்ந்த முகத்துடன் மக்கள் எல்லாம் சூழ்ந்துவர— மங்கல வாத்திய சகிதம் ஆலயத்தை நோக்கி நாம் செல்கின்றபோது என்னுடைய உள்ளம் அந்த ஆலயத்தின் தொன்மையை எண்ணிப்பார்க்கிறது! ஈழத் தமிழர்கள் இந்நாட்டின் பழங்குடி மக்கள் என்பதையும், சிங்கள இனத்தின் மூதாதையென்று மகாவம்சம் கூறுகின்ற விஜயன் இந்நாட்டில் காலடி எடுத்து வைப்பதற்கு முன்பிருந்தே, தமிழர்கள் இந்நாட்டில் ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்கள் என்பதையும் வரலாற்று ஆதாரத்துடன் இன்றைக்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும் ஐந்து பழம்பெரும் சிவாலயங்களில் ஒன்றுதான் இந்த நகுலேசுவரம்!

"Long before the arrival of Vijaya, there was in Lanka five recognised Eswarams of Siva, which claimed and received the adoration of all India. There were Thiruketheswaram near Mahatatthi, Munneswaram dominating salawatte and pearl fishery, Thandeswaram near manthoddm, Thirukoneswaram opposite the great way of cottiyar and Naguleswaram near Kankesanthurai."

"விஜயன் வருவதற்கு மிக நீண்டகாலத்திற்குமுன்பிருந்தே அகில இந்தியாவினாலும் ஏற்றுக்கொள்ளப்பபட்ட ஐந்து சிவாலயங்கள் இலங்கையில் இருந்து வந்துள்ளன, மகா தத்திக்கருகிலுள்ள திருக்கேதீசுவரம், முத்தும் மீனும் நிறைந்த சலாவத்தையை தன்னகத்தே கொண்டுள்ள முன்னேசுவரம், மாந்தோட்டைக்கு அருகிலுள்ள தாண்டேசுவரம், கொட்டியாற்றுக்கு எதிரிலுள்ள திருக்கோணேசுவரம், காங்கேசன் துறையிலுள்ள நகுலேசுவரம் ஆகியவையே அவை!"

இவ்வாறு பிரபல வரலாற்றாசிரியரான டாக்டர் போல் ஈ. பீரிஸ் (Dr. Paul E. Peris) என்பார் 1917ம் ஆண்டு தாம் எழுதியிருந்த நூலொன்றில் குறிப்பிடுகிறார்!

இவ்வாறாக ஈழத்துக்கும் தமிழனுக்கும் இருக்கும் தொன்மைத் தொடர்பையும் பிரிக்கமுடியாத— மறுக்கமுடியாத உரிமையையும் எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கும் நகுலேசுவரத்தில் தமிழறிஞர்கள் பொலிவுடன் வரவேற்கப்பட்டனர்.

ஆலயத்தில் சிறப்பு வழிபாடு நடந்தபோது, மேனாட்டு அறிஞர்கள் அனைவரும் அதில் பக்திசிரத்தையுடன் பங்குகொண்டனர். நகுலேசுவரத்தின் தொன்மைச் சிறப்பினை அறிந்த அவர்கள், கோயிலின் உள்ளே சென்று, ஆங்குள்ள சிலைகளையும் சிற்பங்களையும் பார்த்துப் பார்த்து பரவசமடைந்தனர். கனடா நாட்டுப்பேராசிரியையான செல்வி பிருந்தாபெக் அவர்கள், அழகான பட்டுப் புடவையுடன் திருநீறணிந்து, சந்தனமும் குங்குமம் கொண்டு பொட்டிட்டு அசல் சைவத் தமிழ்ப் பெண் போலவே பக்திசிரத்தையுடன் காட்சியளித்தார்.

நகுலேசுவரத்தைப் பார்வையிட்ட, பின்னர், கோவிலின் பிரதம குருக்கள், தம்முடைய இல்லத்தில் தேநீர் விருந்துபசாரம் ஒன்றை அளித்தார். விருந்துபசாரம் முடிவுற்றதும் ஜெர்மன் நாட்டு அறிஞர் ஜெனட் அவர்களும், மதுரைப்பேராசிரியர் முத்து சண்முகமும் நன்றியுரை தெரிவித்துப் பேசினார்கள்!

"நான் இங்கு உங்கள் மத்தியில் இருக்கும் போது, ஏதோ வெளிநாட்டில் இருப்பது போன்ற உணர்வு எனக்கு அறவே இல்லை. நான் நாஞ்சில் மாவட்டத்தைச்சேர்ந்தவன். இங்கு இருக்கும் போது எனக்கு கேரள மாநிலத்தில் இருப்பது போன்ற உணர்வே ஏற்படுகிறது. உங்கள் பேச்சு வழக்கு, கோவில் அமைப்பு, கலாசாரம், பண்பாடு வழிபாட்டு முறை அனைத்தும் நாஞ்சில் மாவட்டத்திலுள்ளவை போன்றே இருப்பதைக் காணுகிறேன். இது பற்றி ஆராய்ச்சிகள் மேற்கொள்வது அவசியம். தமிழகத்துக்கும் தமிழ் ஈழத்துக்கும் இருந்து வரும் இத்தொன்மைத் தொடர்புகளை அறுத்தெறிவது என்பது யாராலும் எக்காலத்திலும் முடியாத காரியம். எத்தனையோ தடைகளைத் தாண்டி கஷ்டப்பட்டு இங்கு வந்துசேர்ந்தேன். உங்கள் மகிழ்ச்சியான முகங்களைக்கண்டேன். என் களைப்பெல்லாம் எங்கோ ஓடி மறைந்துவிட்டது! உங்களையும் எங்களையும் எவராலுமே பிரிக்கமுடியாது!"

இந்தச் சாரப்பட, பேராசிரியர் முத்து சண்முகத்தார் உரையாற்றினார். அவரது அந்த உணர்ச்சிமிக்க உரை, சோர்ந்திருந்த தமிழ் உள்ளங்களுக்கு புதிய உற்சாகத்தை அளிப்பதாக அமைந்தது.

நகுலேசுவரத்திலிருந்து புறப்பட்டு, கீரிமலையை அடைகிறோம். நிகழ்ச்சி நிரலின்படி கீரிமலைக் கடலில் குளிப்பதாக ஏற்பாடு! குளிர் ஒரு புறம் வாட்டியெடுத்தது.

"குளிப்பதா? ஐயையோ வேண்டாம்; இடங்களை மட்டும் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்புவோம்!" என்றார்கள் வெளிநாட்டுப் பேராளர்கள்! அவர்களின் விருப்பப்படி குளிக்கும் திட்டம் கைவிடப்பட்டது.

கீரிமலைக் கடற்கரையோரத்தில் நின்று இயற்கை எழில் பொங்கும் இனிய காட்சிகளை சிறிது நேரம் மெய்மறந்து இரசிக்கிறோம்! பசியோ வயிற்றைக் கிள்ளுகிறது! காங்கேசன் துறை சிமெந்துதொழிற்சாலை விருந்தினர் விடுதியில் எங்களுக்கு காலை உணவு தருவதற்காக வைத்த கண் வாங்காது காத்திருக்கின்றனர், சிமெந்து தொழிற்சாலை ஊழியர்கள்!

மேலும் அவர்களைக் காக்க வைக்கலாமா? கூடாது!! இதோ புறப்படுகிறோம்!

—வளரும்.

# சிறிமாவோவுக்கு ஒரு பகிரங்கக் கடிதம்!

## சென்னை "நீட்டோலை" தீட்டுகிறது!

சென்னையிலிருந்து வெளிவரும் "நீட்டோலை" எனும் வார இதழில் இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவுக்கு "திரைநீதி செல்வம்" என்பவர் "இலங்கையின் படுகொலைகள்" எனும் தலைப்பில் ஒரு பகிரங்க கடிதத்தை தீட்டியுள்ளார். அதை சுதந்திரன் வாசகர்களுக்காக இங்கே தந்துள்ளோம்!—ஆர்.

"தமிழர்கள் தீவின் பொது வாழ்வில் இரண்டறக் கலந்து, சமுதாயம் அனைத்தின் நலனுக்கும் உழைக்க வேண்டும்; அவர்கள் தனித்து இயங்குவதால் பிறர் ஒருங்கிணைந்த எதிர்ப்பாளர்களாக மாறுகிறார்கள். இது ஒற்றுமையுணர்வு வளர்வதற்கு ஏற்றதல்ல"

இவ்வாறு கூறுவது யார்?

இலங்கையின் பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா!

தான் பிரதம மந்திரியான காலத்தில் இருந்து தமிழ்ப் பிரதேசத்தின் தலைவாசலைக் கூட நினைத்தும் பாராத இலங்கை பிரதமர், அண்மையில் தமிழ்ப் பகுதியில் தனது முதல் சுற்றுப் பிரயாணத்தின்போது யாழ்ப்பாணத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நேரத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு மேற்கண்ட அறிவுரையை வழங்கியுள்ளார்!

அன்பு, உண்மை, நேர்மை சத்தியம், பொறுமை, அடக்கம், அறிவு, தன்மானம், நிதானம், நிர்வாகம் இத்தனையையும் மொத்தமாகப் பார்க்கத்தான் ஆண்டவன் பெண்ணைப் படைத்தான் என்பார்கள் புராணீகர்கள்.

இந்தப் பெண்ணுக்கும் மேல் ஒருபடி உயர்ந்து காணப்படுபவள் தாய். பெண்ணாக இருந்தவள் தாயாகும்போது அவளை உலகத்தார் மத்தியில் உயர்த்திக் காட்டும் ஏணியாக அவளிடம் உருப்பெறுவது 'பாசம்' எனும் உணர்வு.

திருமதி ஸ்ரீமாவோ அவர்களே!

நீங்கள் உங்களுடைய மூன்று குழந்தைக்கு மட்டும் தாய் இல்லை; ஈழத்தின் 130 லட்சம் மக்களுக்கும் தாயானவர். ஈழத்துத் தாய்களுக்கெல்லாம் தாய்.

அதனால் உங்களிடம் மற்ற அன்னைகளிடம் இல்லாத உயர்வுகள் — பெண்மையின் அருங்குணங்களின் அளவு— அபரிதமாக இருக்கும் என்ற நம்பிக்கையில் கேட்கிறேன்.

தங்கள் கணவர் திரு. பண்டாரநாயகா ஆட்சிக்கு வருவதற்காக தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கிய காலத்தை எண்ணிப் பாருங்கள்.

தங்கள் கணவர் கண்டி 'போகாம்பர மைதான'த்தில் நடந்த தேர்தல் கூட்டல் கூறினார் 'நான் ஆட்சிக்கு வந்தால் இலங்கையில் உள்ள எல்லாத் தமிழர்களையும் இருபத்திநாலு மணி [illegible]'

நீங்களோ, தமிழர்களை தீவின் பொது வாழ்வில் இரண்டறக் கலந்துகொள்ளச் சொல்கிறீர்கள்.

தமிழர்கள் எப்போது தாயே, இலங்கையின் பொது வாழ்வில் இருந்து விலகி இருந்தார்கள்? சொல்ல முடியுமா?

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட்டுத் தமிழர்கள் சிந்திய ரத்தம் மகாவலி கங்கையின் மற்றோர் பிரளயப் பெருக்காகுமே!

மறந்து விட்டீர்களா? அல்லது மறைக்கின்றீர்களா?

போர்த்துக்கீசரையும், ஒல்லாந்தரையும் இலங்கையில் இருந்து விரட்டியடிக்க ஈழத்துத் தமிழர்கள் தொடுத்த போர்கள், — இழந்த உயிர்கள் எத்தனையெத்தனை? எண்ணிப்பார்க்க முடியுமா?

அந்நியரை எதிர்க்கும் போதெல்லாம் தமிழர்கள் தங்கள் மண்ணின் மணம் குன்றாது மலர்ந்தார்கள்.

அதற்கு நீங்கள் காட்டிய பிரதிபலிப்பு என்ன?

தமிழர்களின் உயிரையே பறித்தீர்கள்! ஆம்—அவர்களது உயிரான தமிழ் மொழியை அழித்து ஒழிக்க எத்தனை வழி முறைகள் உண்டோ அத்தனையும் எடுத்தீர்கள்.

சிங்களமே ஆட்சிமொழி; சிங்களம் படித்தவர்களுக்கே வேலை என்றார் தங்கள் கணவர்,

ஆயிரமாயிரம் ஆண்டுகளாய், ஈழத்தில் வாழ்ந்த தமிழர்கள் உரிமைக்குரல் கொடுத்தார்கள்.

பாராளுமன்றத்தின் முன்னே அமைதியின்வடிவம் —ஈழத்துக் காந்தி, தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அறவழியில் உண்ணாவிரதம் இருந்தார்.

தங்கள் கணவரோ தனது குண்டர்களை ஏவிவிட்டு கோல்பேஸ் திடலுக்கு முன்னே உள்ள கடலுக்குள் அச்சத்தியாக்கிரகிகளை அடித்துத் தூக்கிப்போட வைத்தார்.

சமுதாயம் அனைத்தின் நலனுக்கும் உழைக்கவேண்டும்' என்கிறீர்கள்.

மனித சஞ்சாரமற்று வனமாய் இருந்த இலங்கையைத் திருத்தி வளம் கொழிக்கும் நாடாக்கிய தமிழர்களுக்குத் தாங்கள் தந்த பட்டம் என்ன தாயே?

நாடற்றவர்!

நியாயம்தானா இது!

—6-ம்பக்கம் பார்க்க

## நம்மவர் சோசலிச முற்போக்குப் பொருளாதாரம்

சொகுசாக சோஷலிசம் பேசி
தம் சோற்றிற்கு வகை தேடியவர்கள்
சோடிச்சு கணக்காக கதை கட்டி
தமிழர் தம் பகையைத் தேடவேண்டாம்

மூச்சுப் பிடித்து முற்போக்குப் பேசி
முதல்தரமான முதலாளி ஆனவர்கள்
எம் தமிழை இகழ்ந்து
எரி தழலில் விழவேண்டாம்

பொருளாதாரம் பேசி
பொருளாதாரம் தேடியவர்கள்
எம் மொழியைப் பழித்து
தம் விழியை இழக்க வேண்டாம்

எதையும் பேசி எதையும் பெற்றுக்கொள்ளுங்கள்
சதையைக் கொடுத்து நம் தமிழர் சரித்திரம்
படைக்கும் [illegible]

உதையும் விழும் உமிழ் நீரும் சொரியும்
எதையும் தாங்கிக்கொள்ள தயாராக இருங்கள்

—"மல்லாகம் தில்லா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழமும் பாலஸ்தீனமும்!

**அன்பு நண்பா,**

"முடியுமா இவர்களால்?"

"இவர்களாவது நாடு அமைப்பதாவது?"

"உலகத்தில் எந்த நாடு இவர்களுக்கு உதவி புரியும்?"

"எந்த நாடு இவர்களுக்காக குரல் கொடுக்கும்?"

தமிழ் ஈழத்தின் விடுதலைக்காக போராடி வரும்நம்மைப்பார்த்து—தமிழர் கூட்டணியினரைப் பார்த்து—எட்ட நின்று ஏளனம் பேசுவோர்—இனத்தைக் காட்டிக்கொடுத்து வயிறு கழுவும் எட்டப்பத் துரோகிகள் இவ்வாறு எக்காளமிட அண்மைக்காலமாக ஆரம்பித்திருக்கிறார்கள்!

நாம் நீதிக்காகப்போராடுகிறோம்; நியாயத்துக்காக போராடுகிறோம்! தர்மத்தின் வாழ்வுதனைச் சூது இன்றைக்கு வென்றாலும் தர்மம் மறுபடி வெல்லும் என்கிற அசையாத நம்பிக்கையுடன் போராடுகிறோம்; இழந்த எங்கள் தாயகத்தை — தமிழ் ஈழத்திருநாட்டைமீட்டிடப்போராடுகிறோம்! நியாயம், நீதி, நமது பக்கம் இருப்பதனால், உலக நாடுகளின் கண்கள் என்றோ ஒரு நாள் நமது பக்கம் திரும்பியே தீரும்; தமிழ் ஈழத்தின் விடுதலைப் பிரச்சினை அகில உலகப் பிரச்சினையாக மாறியே தீரும்; நீதிக்காக—நமக்காக—வாதாடிட — தோள்கொடுத்திட — நியாயத்துக்கு தலைவணங்குகிற ஏதாவது ஒரு உலக நாடு அல்லது நாடுகள், அந்த வேளையில் நிச்சயம் முன்வந்திடும் என்கிற அந்த நம்பிக்கையுடன் நாம் நமது இலட்சியப் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம்!

ஒருவேளை அப்படித்தான் உலகநாடு எதுவுமே நம்மை ஆதரித்திட முன் வந்திடாவிடினும் கூட — நாம் நிச்சயம் போராடியே தீர வேண்டிய நிலையிலிருக்கிறோம்! எப்படியென்றாலும்—என்ன விடுதலைகொடுத்திட நேர்ந்திடினும் களைப்போ அயர்வோ இன்றிப்போராடி—நம்முடைய தாயகத்தை—தமிழ் ஈழத்தை மீட்காவிட்டால், நாமும் நமது வருங்கால சந்ததியும் இந்த உலகில் சுதந்திரமுள்ள மக்களாக வாழ்ந்திட வாய்ப்பே கிடையாது என்கிற காரணத்தினால்—நாம் அழிந்தாலும் சரி, வாழ்ந்தாலும் சரி விடுதலைக்காக போராடுகிற அந்த முயற்சியிலே ஈடுபட்டே தீரவேண்டிய நிலையிலிருக்கிறோம்!

தமிழ் ஈழத்தின் விடுதலையை நோக்கித்தான், சிங்கள ஆட்சியின் இருட் சிறைக்கோட்டங்களில்—நம்முடைய இரத்தத்தின் இரத்தங்களான— சதையின் சதைகளான எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் கடந்த பன்னூறு நாட்களாக சிறைக்கொடுமைகளையெல்லாம் தாங்கிக்கொண்டு—தங்கள் வாழ்வின் வசந்த காலமான இளமைக் காலத்தை பலிகொடுத்து—தங்கள் வாழ்வையே அழித்துக்கொண்டு—இன்றைக்கு தவம் புரிந்து வருகிறார்கள்!

தமிழ் ஈழத்தின் விடுதலையை நெஞ்சில் நிறுத்தித்தான்—தம்பி சிவகுமாரன்—நம்மையெலாம் கோழைகளாக்கும் விதத்தில் தன்னுயிரைத்தானே பலி தந்து—தமிழ் ஈழவிடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு வீர வரலாற்றைத் தீட்டி விட்டுச் சென்றான்!

நண்பா, இதையெல்லாம் நான் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்றால்—எவ்வளவுக்கெவ்வளவு நம்முடைய விடுதலை இலட்சியத்திற்காக நாம் முனைப்புடன் போராடுகிறோமோ—எவ்வளவுக்கெவ்வளவு தியாகவேள்வியில் நம்மைப் புடமிட்டுக் கொள்ளுகிறோமோ—எவ்வளவுக்கெவ்வளவு இழந்த நம் தாயகத்தை மீட்டிடும் பணிக்கு நம்மை நாமே ஒப்படைக்கிறோமோ — அவ்வளவுக்கவ்வளவு அவை உலகின் கவனத்தைக் கவரும் என்பதை எடுத்துக் காட்டிடத்தான்!

பாலஸ்தீன மக்களின் விடுதலைக் கீதம் இன்றைக்கு ஐ. நா. பொதுச்சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்ட சம்பவம் இந்த உண்மையைத்தான் நமக்கு எடுத்துக்காட்டி நிற்கிறது!

15 இலட்சம் பாலஸ்தீனிய மக்களுக்கு சமாதானம், சமத்துவம் சுயநிர்ணய உரிமையுடன் தனி ஆட்சியுடைய 'தாயகம்' ஒன்று வேண்டும் என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கம் எழுப்பி வந்த குரல்-நடத்தி வந்த போராட்டம்-செய்த தியாகங்கள்-இன்றைக்கு உலக நாடுகளின் கவனத்தைக் கவர்ந்து ஐ. நா. சபையினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டதென்றால்-தமிழ்ஈழ விடுதலை முழக்கமும் ஐ. நா. சபையில் ஏன் ஒரு நாள் எதிரொலித்திட முடியாது என்பதை நாம் எண்ணிப் பார்த்திட வேண்டும்!

15 இலட்சம் பாலஸ்தீனியர் தனியாக வாழ்வது நியாயம் என்றால் — ஏற்கெனவே ஈழத்தில் தனியரசு நடத்திவந்த 35 இலட்சம் தமிழ் இனத்தார் ஏன் தனியாக மீண்டும் வாழமுடியாது? இழந்த தாயகத்தை ஏன் மீட்டிடமுடியாது?

நண்பா, நமக்கு தனியான நாடுண்டு; தனியான மொழியுண்டு; தனியான வரலாறு உண்டு; தனியான கலைகலாசாரம் பண்பாடு உண்டு; இவையெல்லாம் இருக்கும்போது ஒரு தனி நாட்டினமாக—சுயாட்சியுடைய இனமாக ஏன் வாழமுடியாது? 15 இலட்சம் பாலஸ்தீனியர்களின் சுயநிர்ணய உரிமைக்காக வாதாடும் ஈழத்தின் "முற்போக்குவாதிகள்" 35 இலட்சம் ஈழத்தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை மறுத்து—தமிழ் விடுதலைக் கோரிக்கையை எதிர்த்துவருவதேன்? "ஊருக்குத்தான் உபதேசம் — உனக்கல்லடி" என்பதுதான் ஈழத்து "முற்போக்கு சக்திகளின்" தத்துவம் போலும்!!

நண்பா, 15 இலட்சம் மக்களைக்கொண்ட சின்னஞ்சிறு பாலஸ்தீனத்தின் விடுதலைக் கோரிக்கை இன்று ஐ. நா. சபையின் ஆதரவையும், அகில உலகத்தின் அனுதாபத்தையும் பெற்றுவிட்ட சம்பவம் — நம்முடைய தமிழ்ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஓர் உந்து சக்தியாக அமைந்துவிட்டது!

பாலஸ்தீனத்தின் சுதந்திரக் கோரிக்கை — இஸ்ரேல் நாட்டின் அழிவில் போய் முடியக்கூடும் என்கிற அச்சத்தினால் அதை எதிர்ப்பவர்கள்கூட — தமிழ் ஈழத்தின் சுதந்திரக் கோரிக்கையை தட்டிக் கழித்துவிடமுடியாது! ஏனெனில் நாம் யாரையும் அழிக்கவும் விரும்பவில்லை; நாம் அழிந்து போவதையும் விரும்பவில்லை; வாழு, வாழ விடு என்கிற தத்துவத்தின் அடிப்படையில்தான், சிங்களமும் தனியே சுதந்திர நாடாக வாழட்டும்; தமிழ் ஈழமும் தனியே சுதந்திர நாடாக வாழட்டும்; இரு நாட்டு மக்களும் பரஸ்பரம் நண்பர்களாக வாழுவோம் — என்றே கூறுகிறோம்!

பாலஸ்தீன மக்களின் விடுதலைக் கோரிக்கை—ஐ. நா.வின் கவனத்தைக் கவர்ந்த சம்பவம் மட்டுமல்ல—நமக்கு தெம்பூட்டும் மற்றோர் செய்தியும் ஏடுகளில் வெளிவந்துள்ளன-

பரப்பளவோ 372 சதுர மைல்கள் — மக்கள் தொகையோ ஆக70,000! சௌடோம்(SAOTOME), பிறின்சைப் (PRINCIPE) ஆகிய இரண்டு சின்னஞ்சிறு தீவுகள்! ஆபிரிக்காவின் மேற்கு கரையோரங்களில் கினியா குடாவுக்குள் உள்ளவை! இந்த இரண்டு தீவுகளின் விடுதலைக்காகப் போராடி வந்த இயக்கங்களுடன் போர்த்துக்கீய அரசாங்கம் சுதந்திரம் வழங்குவது பற்றி இப்போது பேச்சுவார்த்தை நடத்திவருகிறது.

இப்படி உலகின் மூலை முடுக்கெங்கும் உள்ள குட்டி நாடுகள்—நேற்று முளைத்த இனங்கள்—தமக்கென வரலாறே இல்லாத காட்டுமிராண்டி இனங்கள் எல்லாம் சுதந்திரக் காற்றை சுவாசித்திட முனையும்போது—உலகின் மூத்த இனம்—ஈழத்தின் தொன்மை இனம்—உலகுக்கே நாகரிகத்தையும் ஆட்சி முறையையும் போதித்து ஆண்ட இனம்—உயர் தனிச் செம்மொழியாம் தமிழ்மொழியை தாய்மொழியாகக் கொண்ட இனம்—கொத்தடிமையாகி கோழையாகிக்கிடந்திடலாமா? சிறுமைத்தனமாக சிங்களத்துக்குச் சேவகம் செய்து பிழைத்திடலாமா?

கூடாது; கூடாது; இழந்த நம் அரசுரிமையையும் கொடியையும் மீண்டும் மீட்டிட வேண்டும் என்பாய் நண்பா—உன் எண்ணம் தான் எனக்குத் தெரியுமே! ஆனால் தெரிந்தோ தெரியாமலோ—அடிமை வாழ்வை ஆரத் தழுவிக்கிடந்திட விரும்பும் சிலரும் இன்னும் நம் மத்தியில் இருந்திடத்தான் செய்கின்றனர்! அவர்களையும் [illegible]ணையுள்ளவர்களாக—உணர்ச்சியுள்ளவர்களாக மாற்றுவதற்கு நாம்பாடுபட வேண்டும்! நாம் செய்கின்ற தியாகம், அவர்களையும் நம்பக்கம் திருப்புவதாக அமைய வேண்டும்!

நண்பா, நம்முடைய கோப்பாய் பா. உ. சிந்தனைச் சிற்பி சி. கதிரவேற்பிள்ளை அவர்கள் சிங்களவர்களின் எதிரிலேயே தேசிய அரசுப் பேரவையில் வெட்டொன்று துண்டிரண்டாக பின்வருமாறு பகிரங்கமாக கூறிவிட்டாரே—

"இந்திய நாட்டின் தலைவரான இந்திராகாந்தியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு ஆறு இலட்சம் இந்திய வம்சாவளியினரை இந்தியாவுக்கு அனுப்புவதுபோல—தமிழ்ஈழத்தின் தலைவரான தந்தை செல்வாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, சிங்கள நாட்டிலுள்ள தமிழர்களை தமிழ் ஈழ நாட்டுக்கு அனுப்பிவையுங்கள்! எங்கள் ஈழத் தமிழ் நாட்டை எங்களிடமே ஒப்படையுங்கள்! அப்போது சுதந்திர நாடாகிய எங்கள் தமிழ் ஈழம்—பௌத்த நாடாகிய உங்கள் சிங்கள நாட்டுடன்—ஒரு அயல் நாடு என்ற ரீதியில் நட்புறவுடன் விளங்கும்!"

ஆம் நண்பா, சிந்தனைச்சிற்பியின் இந்த துணிச்சலான முழக்கமே, தமிழ் ஈழத்து இளைஞர்களின் எழுச்சி முழக்கம்! தமிழ் மக்களும், சிங்கள மக்களும் ஆளும் இனங்களாக கௌரவமான முறையில் நண்பர்களாக வாழ்வதற்கு—சிங்களத் தலைவர்கள் நம்முடைய கதிரவேற்பிள்ளை அவர்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்களாயின்—இரத்தம் சிந்தாமல்—இரு இனங்களும் மோதிக்கொள்ளாமல் இந்நாட்டு இனப்பிரச்சினைக்கு அமைதியான ஒரு தீர்வு ஏற்பட்டுவிடும்!

அப்படியில்லை — நம் தலைகளை அறுத்துக் கொடுத்து—எலும்புகளை எண்ணிக்கொடுத்து தியாக ஆற்றில் நீந்தி — கண்ணீரும் செந்நீரும் சிந்தித்தான்—தமிழ் மக்கள் சுதந்திர சூரியனைத் தரிசித்திட வேண்டும் என்பது இயற்கையின் கட்டளையாக இருந்தால்—அதற்கும் தமிழ் இளைஞர்கள் இன்றைக்குத் தயாராகவே இருக்கின்றனர் என்பதை நான் சொல்லிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லையே!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

## கண்கள் குளிர்ந்திடுமோ?

இராவணன் என்ற திராவிடன் வாழ்ந்த
புராதன நாட்டினிலே — எல்லாள

இராசர்கள் இருந்து புகழ்பட ஆண்டிட்ட
புண்ணிய பூமியிலே — சற்றும்

ஈரமிலா தவர் எங்களை ஆண்டு
இழிவு படுத்திடவோ — அதைச்

சீருறு வாட்சி என்று புகழ்ந்து
சிந்தை மகிழ்ந்திடவோ

ஆயிர மாயிர மாண்டுச் சரித்திரம்
படைத்து இருப்பவர் நாம்—அதில்

யாருக்கும் அடிமை செய்து பிழைத்திட்ட
கேவலம் இல்லையடா — சுதந்திர

வீரர்களாக வாழ்ந்த இனத்திற்கு
வீழ்ச்சியை ஏற்படுத்தப்—பல

காரியம் செய்திடும் கயவரைக் கண்டுநம்
கண்கள் குளிர்ந்திடுமோ?

யாப்பிலே தமிழர்க்கு ஆப்புகள் வைத்தவர்
—தம்மவர்க்கதில்
காப்புகள் வைக்கின்றார்—தேசியச்
சோப்பினைப்போட்டெமை வெற்று
எலும்பினைச்
சூப்பிட வைக்கின்றார்—அதைப்
போற்றிடத் தமக்கொரு கூட்டத்தை
[illegible]த்துப்
போற்றுதல் செய்கின்றார்—உரிமை[illegible]
கூக்குரல் போட்டாரைச் சிறை[illegible] தள்ளி
தாக்குதல் செய்கின்றார்.

—இந்திரசித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## டாக்டர் என். எம். மிடம் சில கேள்விகள்!

"ஊரடங்குச் சட்டத்தை மீறி நமது தொழிலாளர்களை துப்பாக்கிக் குண்டுகளுக்கு பலி கொடுத்திட நாம் தயாராக இல்லை!" என்று தேசிய அரசுப்பேரவையில் நிதியமைச்சரும் சமசமாஜக்கட்சியின் தலைவருமான டாக்டர் என். எம். கூறியிருக்கிறார்!

நிதியமைச்சரின் இந்தப்பொறுப்புணர்வைப் பாராட்டுகிறோம்! அதே வேளையில் நமக்கு எழுகின்ற சில சந்தேகங்களையும் அவரிடம் கேட்கவிரும்புகிறோம்!

ஒரு நாட்டின் அரசாங்கத்துக்கு—அமைச்சரவைக்கு—கூட்டுப்பொறுப்பு (Collective Responsibility) உண்டு என்பதை நிதியமைச்சர் மறுக்கமாட்டார் என்று நம்புகிறோம்!

அந்த அடிப்படையில் கேட்கிறோம்—சமசமாஜக் கட்சித்தொழிலாளர்களின் ஊர்வலத்தை தடை செய்து ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்தது யார்? ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது வேறு கட்சிகளோ இல்லையே! உங்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தானே!

அந்த அரசாங்கத்தில் முக்கிய பொறுப்பை வகிக்கும் நிதியமைச்சர் என்ற முறையில்—உங்கள் தொழிலாளர்களின் ஊர்வலத்துக்கு எதிராக ஊரடங்குச் சட்டத்தை பிறப்பித்த அரசின் செயலுக்கு—கூட்டுப்பொறுப்பு என்ற தத்துவத்தின் அடிப்படையில் நீங்களும் விரும்பியோ விரும்பாமலோ பொறுப்பு ஏற்கத்தானே வேண்டும்?

அப்படியில்லை—எனக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது என்று நீங்கள் கூறுவீர்களானால் — "கூட்டுப்பொறுப்பு" என்ற தத்துவத்தை நீங்கள் ஏற்கவில்லை என்று ஆகிறது!

அப்படியானல்—இந்த நாட்டில் ஒரு அரசாங்கம்தான் நடக்கிறதா? அல்லது இரண்டு மூன்று அரசுகள் ஒரே சமயத்தில் இயங்குகின்றனவா என்ற ஐயம் நமக்கு ஏற்படுகிறது!

உங்களைப் புறக்கணித்துவிட்டு உங்கள் தொழிலாளர்களின் ஊர்வலத்தை நசுக்குவதற்கு அரசு ஊரடங்குச் சட்டத்தை ஏவிவிட்டது என்றால், ஐக்கிய முன்னணிக்குள் பாரிய பிளவு உண்டென்பதையாவது ஒப்புக்கொள்ளுங்கள்!

அதுசரி—உங்களுக்கும் உங்கள் கட்சிக்கும் பட்டை நாமம் சாத்தி—அரசியலில் மானத்தை கெடுத்தபின்னரும், இன்னும் அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கிறீர்களே—

பதவி ஆசை யாரை விட்டது?

பாவம், வயதான காலத்தில் பதவியை விட்டு விட்டு' நீங்கள் ஏன் வீணுகக் கஷ்டப்படவேண்டும்? தொழிலாளர் உரிமைகள் எக்கேடு கெட்டால் தான் உங்களுக்கு என்ன?

இன்னுமொன்று கூறியிருக்கிறீர்கள்! அதுதான் தமிழர்களின் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்போம் என்று!

1973ம் ஆண்டு மார்ச் திங்கள் 10ம் நாள் நீங்கள் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோதும் இதே மாதிரித்தான் தமிழர் பிரச்சினைகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்போவதாகக் கூறியிருந்தீர்கள்! பின்னர் 20 மாதங்கள் கழித்து இப்போதும் பேச்சுவார்த்தை பற்றி பேசியிருக்கிறீர்கள்!

கழிந்துசென்ற இந்த 20 மாதங்களும் தமிழர் பிரச்சினை உங்களுக்கு நினைவுக்கு வரவில்லை போலும்! உங்கள் கட்சிக்கு பிரச்சினை வந்த போதுதான் தமிழர் பிரச்சினையும உங்கள் நினைவுக்கு வந்திருக்கிறது!

பேச்சுவார்த்தையை யாருடன் ஆரம்பிக்கப்போகிறீர்கள்? எப்படி ஆரம்பிக்கப்போகிறீர்கள்? எப்போது ஆரம்பிக்கப்போகிறீர்கள்?

இதை ஏன் கேட்கிறோமென்றால்—உங்கள் ஐக்கிய முன்னணிக் கூட்டாளிகளான சிறீலங்கா சுதந்திரக் கட்சியினர் ஒரு விசித்திரமான கருத்தைக் கூறித்திரிகின்றனர்!

அதாவது—தமிழ் மக்களின் பிரச்சினையை, அவர்களுடைய பிரதிநிதிகளாகிய தமிழர் கூட்டணியினருடன் பேசித் தீர்க்கமாட்டோம்; தமிழ் மக்களுடன் நேரடியாகப் பேசுவோம்! என்று கூறுகிறார்கள்!

இதே முன்மாதிரியைப் பின்பற்றி கச்சதீவு பிரச்சினை—இந்திய வம்சாவளியினர் பிரச்சினை ஆகியவை பற்றி சிறிமா அம்மையாருடன் பேசமாட்டோம்—இலங்கை மக்களுடன் நேரடியாகவே பேசித்தீர்ப்போம்—என்று இந்திரா காந்தியம்மையார் அறிவித்திருந்தால்—இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்பட்டிருக்கமுடியுமா?

ஏன்? உங்களுக்குப் புரியும் மொழியில் கூறுவதாயிருந்தால்—தொழிலாளர்களின் பிரச்சினைகள் வரும்போது—தொழிற்சங்கத் தலைவர்களுடன்தான் பேசுவீர்களே தவிர—இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடன்நேரடியாகவா பேசித்தீர்க்கிறீர்கள்?

எனவே 'பேச்சுவார்த்தை' என்று கூறும்போது—எப்படி பேசப்போகிறீர்கள்—யாருடன் பேசப்போகிறீர்கள்—எப்போது பேசப்போகிறீர்கள் என்பன போன்ற விபரங்களையும் அறிவித்துவிடுங்கள்!

ஏனெனில் "பேச்சுவார்த்தை' என்ற வார்த்தை இந்நாட்டில் ஒரு கேலிக்குரிய வார்த்தையாக அரசியலில்—மிகவும் மலிவான வார்த்தையாக இன்று மாற்றப்பட்டுவிட்டது!

## தேசியப் பேரவையில் கதிரவேற்பிள்ளை......

—1-ம் பக்கத் தொடர்

யத்தை இங்கே மெதுவாகச் சொன்னார். தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய நாம் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கக் கூடியதாக இருக்கவேண்டும்; உணவு உற்பத்தி, பொருளாதார அபிவிருத்தி ஆகிய விடயங்களிலே நாங்கள் ஒன்று சேர்ந்து இயங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மெல்லிசாகச் சொல்லி வைத்தார். அது உண்மையான ஒரு நிலையை எடுத்துக்காட்டுகிறது.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நாங்கள் ஆரம்பத்திலே இந்த அரசாங்கத்திற்கு ஆதரவாகவே இருந்தோம். ஆனால், அரசாங்கமோ தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றைஓரளவு தீர்த்து தமிழ் மக்களையும் சேர்த்து நடத்துவதற்குத் தயங்கிக்கொண்டு தமிழ் மக்களை விலக்கி நடத்திக் கொண்டு வந்திருக்கிறது. அது சிறிய விடயமாக இருந்தாலும், இந்த அரசாங்கம் தமிழர்களை விலக்கி நடத்தும் தத்துவத்தைத் தெளிவாகக் காட்டுகிறது.

### சின்ன உதாரணம்

தேசிய அரசுப்பேரவைத் தலைவரின் அலுவலகத்திலேயிருந்து இந்த வரவு

யாழ்ப்பாண உறுப்பினர், யாழ்ப்பாணத்திலே உணவு இருக்கின்றது என்று நம்புகின்றார். நான் சொல்வதை அவர் மன்னிக்கவேண்டும். அவர் இப்போது யாழ்ப்பாணத்திலே இல்லை. மேலும் அவர் இங்கு ஒரு விஷயத்தை வாசித்துக்காட்டினார். அதாவது, இந்தியாவில் ஒரு பிரதேசத்திலே பசிக்கொடுமையால் ஒரு தாய் தனது பிள்ளையை அவித்துச் சாப்பிட்டாள் என்று அவர் எடுத்துக் காட்டினார். ஆனால், யாழ்ப்பாணத்திலே உணவு இல்லாமல் ஒரு தாய் தனது பிள்ளைக்கு நஞ்சு கொடுத்துத் தானும் நஞ்சருந்திச் செத்தாள்.

நெல் விளையும் மாவட்டமான அம்பாறை மாவட்டத்திலே ஒரு கொத்து அரிசி நாலரை ரூபா வரை விற்கின்றது என்று இங்கு ஒருவர் ஆத்திரப்பட்டார். ஆனால், யாழ்ப்பாணத்திலே இன்று ஒரு கொத்து அரிசி எட்டு ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. பொருள்களின் விலைவாசிகள்யாழ்ப்பாணத்திலே கொழும்பிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கின்றது. எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் அப்படித்தான். அப்படிப்பட்ட நிலையில்தான் இன்று நாம் யாழ்ப்பாணப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே எட்டு இலட்சம் மக்

டத்தை நீங்கள் கொண்டு வரும்பொழுது ஆங்கிலேயர் இந்த நாட்டுக்குத் தந்த—சோல்பரிகொமிஷன் தந்த—அரசியலமைப்பை நீக்கி புரட்சிகரமான ஒரு புதிய நாட்டுக்குப் பொருத்தமான குடியரசு அமைப்பை உருவாக்க வேண்டும் என்றீர்கள். அத்தோடு ஆங்கிலேயர் தந்த கடைசி அரசியல் அம்சம் நீங்கிவிட்டது என்று நினைத்துக் தொண்டர்கள். ஆங்கிலேயர் தந்த கடைசி அரசியலமைப்பு எப்பொழுது நீங்கும் என்றால் தமிழ் நாடும் சிங்கள நாடும் பிரிகிற நேரத்திலேதான் நீங்கும்.

உங்களுக்குச் சரித்திரம் தெரியுமென்றால் 1833ஆம் ஆண்டிலேதான் ஆங்கிலேயர்கள் சிங்கள நாட்டையும் தமிழ் நாட்டையும் இணைத்தார்கள் நிர்வாகத்துக்காக. அப்பொழுது கண்டி நாட்டு மக்கள் அதை எதிர்த்தார்கள்கரையோரப் பகுதியோரும் தரைநிலப் பகுதியோரும் தங்களை இணைக்கக்கூடாது என்று எதிர்த்தார்கள். அப்படிச் சிங்கள மக்கள் எதிர்த்த நேரத்திலே கூட ஆங்கிலேயர் அதைப் பொருட்படுத்தாது நிர்வாக வசதிக்காக இரு நாடுகளையும் இணைத்தார்கள். அன்றுஇடப்பட்ட

## தமிழ் ஈழமும் சிங்களமும் பிரிவதே இனப்பிரச்சினை தீர்வதற்கு ஒரே வழி!

செலவுத்திட்ட விவாதம் சம்பந்தமாக எங்கள் எல்லோருக்கும் ஒரு அறிவித்தல் கிடைத்திருக்கிறது. அதிலே எவ்வெத் தேதிகளிலே வரவு செலவுத் திட்ட விவாதம் நடைபெறும் என்று இருக்கின்றது. அது இங்கே என் கையில் இருக்கின்றது. அந்த அறிவித்தல் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும்தான் இருக்கின்றன. தமிழிலே இல்லை. இதைத்தான் விலக்கி நடத்துவது என்று சொல்வது. இந்தச் சபை மண்டபத்தின் இரு பக்கங்களிலும் அறிவித்தல்- பலகைகள் இருக்கின்றன. இந்தத் தேசிய அரசுப் பேரவையின் நிகழ்ச்சிகள் பற்றிய அறிவித்தல்கள் ஆங்கிலத்திலும் இருக்கிறது; சிங்களத்திலும் இருக்கிறது. தமிழில் இல்லை. இது தமிழ் மக்களை விலக்கி நடத்துவதற்கு ஓர் எடுத்துக்காட்டு.

அரைகுறையான சோசலிசம் இயங்காதென்று நிதி அமைச்சர் ஓரிடத்தில்சொன்னார். அது உண்மைதான். அதே போன்று எங்களை அரைகுறையாக விலக்கி நடாத்துவதிலும் பார்க்க முழுமையாக விலக்கி நடாத்துவது மிகவும் பொருத்தமானது. ஆதலால் இந்த வரவு செலவுத் திட்டத்தை இப்படி அமைப்பதிலும் பார்க்க அடுத்த வருஷம் தொடக்கம் வரவு செலவுத் திட்டத்தைச் சிங்களப் பிரதேசத்தோடு—சிங்கள நாட்டோடு—வைத்துக் கொண்டு தமிழ்ப் பிரதேசத்தையும் தமிழ் மக்களையும் பூரணமாக விலக்கி வைத்துவிட்டால் மிகவும் பொருத்தமாக இருக்கும்.

### 25 வருட சிங்கள ஆட்சியில்...

ஏனெனில், ஏறக்குறைய கடந்த இருபத்தைந்து வருடங்களாக இந்நாட்டிலே சிங்கள ஆட்சி நடந்து இன்று நாடு ஓர் எல்லைக்கு வந்திருக்கின்றது. பசி, பட்டினி, சாவு என்னும் எல்லைக்கு வந்திருக்கிறது. இருபத்தைந்து வருட [illegible] இது நடந்திருக்கின்றது.

கள் வாழ்கின்றார்கள். ஆனால் உணவுற்பத்திக்கு அங்கு போதிய நிலமில்லை. நெல் விளைச்சலுக்குப் போதிய நிலமில்லை. மானவாரி நிலங்கள் கூட போதிய அளவில் இல்லை. யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் விளையும் நெல்லையே யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவர முடியாதவாறு அரசாங்கம் தடைவிதித்திருக்கின்றது. அத்துடன் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்துக்கு நெல்லைக் கொண்டுபோக முடியாது. முருகண்டியில் வயலில் விளையும் நெல்லை நான் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வர முடியாது. ஏனெனில், ஆனையிறவில் தடை முகாம் அமைத்திருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம் நெல் விளையும் பிரதேசமல்ல. அங்கு எட்டு இலட்சம் மக்கள் வாழ்கின்றார்கள். அவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்துக்குள் விளைவித்த நெல்லை யாழ்ப்பாணத்துக்குள் கொண்டுவர முடியாத நிலையில் இருக்கிறார்கள். எனவே தான் அங்கு ஒரு கொத்து அரிசியின் விலை எட்டு ரூபாவாக ஆகியிருக்கின்றது. அதுவும் இந்த மார்கழி மாதத்திலே இருபது ரூபாவாக மாறும் என்று சொல்லக்கூடிய நிலை இருக்கின்றது அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில்தான் நாம் விலக்கி நடத்தப்படுகின்றோம்.

### எங்களை முற்றாக விலக்குங்கள்

இப்படித் தமிழ் மக்கள், மலைநாட்டிலேகூட பஞ்சத்தாலும் பட்டினியாலும் சாகிறார்கள். ஆதலால் தமிழ் மக்கள் சாவதற்கு சிங்கள ஆட்சி ஏன் பொறுப்பாக இருக்க வேண்டும்? எங்களை முற்றாக விலக்கி விடுங்கள். நாங்கள் வாழ்ந்தால் என்ன, தாழ்ந்தால் என்ன, அதற்கு நாங்களே பொறுப்பாக இருக்கவேண்டும்; நீங்கள் பொறுப்பாக இருக்கக் கூடாது. நாங்கள் கேட்பது ஒரு பெரிய பிரச்சினை அல்ல. ஏனென்றால் குடியரசுத் திட்

இணைப்பு விலங்கு இன்றும் இருக்கிறது.

### ஆங்கிலேயர் இட்ட விலங்கு

சிங்களவர்களையும் தமிழரையும் தனித்தனியாகச் சுய உரிமையோடுவாழவிடாமல்—சுய ஆட்சியோடு வாழவிடாமல் — ஆங்கிலேயர் அன்றிட்ட விலங்கு இன்றும் இருக்கிறது. அது நீங்கினால் தான் இரண்டு நாடும் சுதந்திரமடைந்த நாடாக, ஆங்கிலேயருடைய கடைசி அரசியல் அம்சம் நீங்கியநாடாக இயங்க முடியும். இந்த நிலையிலே பிரிந்து வாழ்வதற்கு நீங்கள் எங்களுக்கு வழி காட்டுகிறீர்கள். விலக்கி நடத்தாமல், அரைகுறையாகச் செய்யாமல், முற்றாகச் செய்து விடுங்கள் என்று கேட்டு கொள்கிறோம்-

எங்களுடையவாழ்வுக்கும் எங்களுடைய தாழ்வுக்கும் நாங்களேபொறுப்பாளியாக இருக்க வேண்டும். பசியால் மெலிந்து பட்டினியால் செத்தாலும் அதற்கு நாங்கள் தான் பொறுப்பாக இருக்க வேண்டும்; நீங்கள் பொறுப்பாக இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இது கஷ்டமான விடயமல்ல.

### செல்வாவுடன் ஒப்பந்தம் செய்யுங்கள்

இங்கே ஒரு நண்பர் சொன்னார், தொண்டமான் அவர்களை அந்தமானுக்கு அனுப்ப வேண்டுமென்று. இந்த அரசாங்கம்தான் தங்கள் மத்தியில் தமிழ் மக்கள் இருக்கக் கூடாது என்று ஐந்து இலட்சம் பேரை இந்தியாவோடு ஒப்பந்தம் செய்து அங்கே அனுப்பத் திட்டமிட்டிருக்கிறது. அதுபோல செல்வநாயகம் அவர்களோடு ஓர் ஒப்பந்தம் செய்து தெற்கில் வாழும் தமிழ் மக்கள் அத்தனை பேரையும் தமிழ் ஈழத்துக்கு அனுப்பி விடுங்கள்.

பின் நீங்கள் சுதந்திர சிங்கள பௌத்த நாட்டை

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தின் வெற்றி தமிழ் ஈழ சுதந்திரத்துக்கு முன்மாதிரியாகட்டும்!

## உலகின் கவனத்தைக் கவரும் வகையில் தமிழர்செயற்பட வேண்டும்!

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு ஐ. நா. பொதுச்சபை அண்மையில் அங்கீகாரம் அளித்திருப்பதாலும், உறுப்பு நாடுகள் பாலஸ்தீன மக்களுக்கு ஒரு தாயகம் கிடைப்பதற்கு ஒத்துழைப்பு நல்கவேண்டுமென்று தீர்மானித்திருப்பதும் தமிழர் கூட்டணியினருக்கு நம்பிக்கையளிக்கும் செய்திகளாகும்.

மேற்படி முடிவை ஐ. நா. பொதுச் சபை மேற்கொண்டதன் மூலம் 26 ஆண்டுகளுக்கு முன் ஐ. நா. பொதுச்சபை பிரகடனப் படுத்திய மனித உரிமை சாசனத்துக்கு அர்த்தம் உண்டாகிறது. மனித உரிமைகள் வெறும் ஏட்டுச் சுரைக்காயாக இல்லாது, அதனை ஒடுக்கப்பட்டு இன்னல்படும் மக்களுக்கு மீட்டுக் கொடுக்க உலக தாபனம் முன் வந்திருப்பதைப் பாராட்டாதிருக்கமுடியாது.

மனித உரிமைகள் பிரகடனத்தை மதித்து நடப்பதாக உறுதியுரை எடுத்திருக்கும் இலங்கைக்குடியரசுபோன்ற நாடுகள் தத்தமது நாடுகளில் சிறுபான்மைத் தேசிய இனங்களுக்கு மனித உரிமைகளை மறுத்துவருவது வரலாற்று உண்மையாகும். ஐ. நா. பொதுச் சபையால் உருவாகியதே யூதர்களுக்கான தாயகம். இதனால் தமது தாயகத்தை இழந்த பாலஸ்தீனியர்களுக்கும் இப்போது ஒரு தாயகம் கிடைப்பது உறுதியாகிவிட்டது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தவர்களைப் பயங்கரவாதிகள் என்று உலகு வர்ணித்த காலம் கடந்துவிட்டது.

இங்கும் தமிழ் மக்களுக்கு ஒரு தாயகத்தைக் காண்பதற்காக—காலனித்துவத்துக்கு முன் இருந்த தமிழ் ஈழத்தை மீட்பதற்காக இன்று சிறைச்சாலைகளில் தவம் இருக்கும் 42 தமிழ் இளைஞர்களைப் பயங்கரவாதிகள் என்று வர்ணிக்கிறார்கள். பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தையும் அதன் தாயகத்தையும் அங்கீகரிக்கும் ஐ. நா. தீர்மானத்தையும் ஆதரித்த இலங்கைக் குடியரசு அதே கொள்கையை ஈழத்திலும் கைக்கொள்ளுமா?

இவ்வகையில் சம்பந்தப்பட்டவர்களைச் சிந்திக்கும்படி தூண்ட எதிர்வரும் மனித உரிமைகள் தினம் பயன்படட்டும். யூதரின் தாயகத்தை, பாலஸ்தீனியரின் தாயகத்தை மீட்பதில் அயல் நாடுகளில் வாழ்ந்த யூத மக்களும், பாலஸ்தீனிய மக்களும் எடுத்துக்கொண்ட சிரமங்களும், முயற்சிகளும் அயல் நாடுகளில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு உதாரணமாகட்டும். பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்தினரின் பலாத்கார வழிகளிலல்ல சாத்வீகமுறையில் உலக மனச்சாட்சியை உறுத்த அவர்களது நடவடிக்கைகள் பயன்பட வேண்டும். நீதி என்றோ ஒரு நாள் வெல்லும்.

—இன்பரசு.

---

### சிங்களக் கிராம...

1-ம் பக்கத் தொடர்

தாள வாத்தியங்கள் பிடிக்க ரூபா 10,000 வரை பொது மக்களிடமிருந்து சேர்த்து செலவு செய்யப்பட்டதாம் இதைக் கணக்கிட்டுப் பார்த்தால் மந்திரியை வரவேற்கச் செலவு செய்த பணத்திற்கு தந்திக் கம்பிகளையும் விலைக்கே வாங்கி தங்கள் சொந்தச் செலவிலேயே தொலைபேசியை இணைத்திருக்கலாம் என்கிறார்கள் பொது மக்கள்.

எப்படியெல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்கள் சோசலிசம் பேசுவோர்? பொது மக்களின் சொந்த முயற்சியால் செய்த வேலையை திறந்து வைக்க கொழும்பிலிருந்து மந்திரி வரவேண்டுமா? என்று சிலர் கேட்கிறார்கள்.

இதே நேரத்தில் இந்த அமைச்சர் பதவிக்கு வந்த ஒரு வருடத்துக்குள் வவுனியாவிலிருந்து 7 மைல்களுக்கு அப்பால் இருக்கும், 'மாமடு' என்ற சிங்களக் கிராமத்திற்கு அரசாங்கச் செலவிலேயே கொங்கிறீட் தூண்கள் நாட்டி தொலைபேசி இணைத்துக் கொடுத்ததை மக்கள் மறக்கவில்லை. சிங்களக் கிராமத்திற்கு தொலைபேசி இணைக்க அரசாங்கத்திடம் நிறைய பணம் உண்டு தமிழ்க் கிராமத்துக்கு மட்டும் பணம் இல்லை; பொது மக்கள் சிரமதானம் செய்ய வேண்டும். இது ஒருவகை சோசலிசம்! ஒரு தொகுதியிலேயே இரு பார்வைகள்!! தமிழ் மந்திரியின் நிருவாகத்தில் இப்படி என்றால் சிங்கள மந்திரிமாரின் நிருவாகத்தில் தமிழ் மக்களும், தமிழ்ப் பகுதிகளும் எப்படிப் புறக்கணிக்கப்படும் என்பதற்கு வேறு உதாரணம் தேவை இல்லை!

வடக்குக் கிழக்கு மாகாணத்திலேயே வவுனியாவில் தான் இன்னமும் தபால்நிலையம் பழைய கட்டடத்திலேயே இடநெருக்கடியுடன் இயங்கி வருகிறது. இதுவும் அவர் கண்ணுக்குப்படவில்லை!

### முருங்கனில்...

—1-ம் பக்கத் தொடர்

ளத்தைப் படித்து பௌத்த மதத்தில் சேர்ந்துவிடுங்கள்'' என்பதுதான். இப்படி ஏமாற்றியே இந்த மக்களை அங்கிருந்து வெளியேற்றியுள்ளார்.

நிறுவப்பட்டுள்ள பௌத்த ஆலயம் தமிழ் மக்களின் பழம்பெரும் ஆலயமான முத்துமாரியம்மன் கோவிலின் எல்லையில் கட்டப்பட்டுள்ளது. சுற்றுடலில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் பிள்ளைகளுக்கு புத்த பிக்குகள் சிங்களம் போதித்துவருகிறார்களாம்!

### மலையகத் தமி...

—1-ம் பக்கத் தொடர்

—அருளம்பலமோ, மலையக மக்கள் எல்லா சலுகைகளையும் பெற்று உல்லாச வாழ்க்கைநடத்துவதாகதிமிர்பிடித்து உளறியிருக்கிறார்!

அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த அருளம்பலத்தின் உளறல் காரணமாக—மலையகத்தில் சிறீலங்கா சுதந்திரக் கட்சியோ, அதன் அடிவருடிகளான ஐனுப் அசீஸ், சிவலிங்கம் கும்பல்களோ இனித் தலைகாட்ட முடியாத நிலைமை தோன்றியிருக்கிறது. அருளம்பலத்துக்கு எதிராக மலையக இளைஞர்கள் திரளுகிறார்கள்!

இன்று மலையகத் தமிழர்களை கள்ளத்தோணிகள் என்று கூறும் அருளம்பலம் நாளை தனது எசமானர்களை திருப்திப்படுத்துவதற்காக நல்லூர்த் தொகுதி மக்களையும் கள்ளத்தோணிகள் என்று கூறமாட்டார் என்பது என்ன நிச்சயம்? மலையகத் தமிழர்களை கள்ளத்தோணிகள் என்று அவமதித்தும் அவர்கள் செல்வ வாழ்க்கை நடத்துவதாகவும் அருளம்பலம் உளறியிருக்கும் பகுதி வருமாறு:—

"The Federal party challenged the hon member for Mannar as a Kallathoni. It is this same Federal party who wanted all Kallathonis in the Up—Country areas to be given work, land and everything else and full citizenship rights. There are many people in the up-country areas who have come here rceently and are enjoyingall the previleges that they can get and living in luxury".

"மன்னார் உறுப்பினரை கள்ளத்தோணி என்று தமிழரசுக்கட்சி சவால்விட்டது. இதே தமிழரசுக்கட்சிதான், மலையகத்தில் இருக்கும் எல்லாக் கள்ளத்தோணிகளுக்கும் வேலையும், நிலமும், பூரண பிரஜாவுரிமையும் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறியது. அண்மையில் இலங்கைக்குவந்த மலையகத்தில் வாழும் எத்தனையோ மக்கள் பெறக்கூடிய எல்லாச் சலுகைகளையும் பெற்று செல்வச் செழிப்புடன் வாழுகிறார்கள்!"

### பிரதமருக்கு...

—1-ம் பக்கத் தொடர்

சத்தை அடையமுடியாது. எனவே இந்நிலையில் தனியார் துறைக்குஇன்னும் இடமுண்டு!"

— டாக்டர் என். எம். (27-11-74 டெயிலி மிரர்)

சபாஷ் பிரதமர் அவர்களே! வாய்ச் சவடால் அடித்த இரட்டை டாக்டரும் தங்க மூளையுமான நிதி அமைச்சரை, அமைதியாக இருந்துகொண்டே உங்கள் முன்னால்மண்டியிட வைத்துவிட்டீர்களே! கெட்டிக்காரிதான்போங்கள்!! என்கிறான் நம் ஆபீஸ் பையன்!

---

# அருளம்பலத்துக்கு மித்திரனின் கேள்வி!

நல்லூர் தொகுதியில் இருக்கிறது சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கோவில், நல்லூர் பிரதிநிதி திரு. அருளம்பலம் அந்தத் தொகுதி மக்களுக்கு மட்டுமல்ல, நல்லூர்க் கந்தனுக்கும் பிரதிநிதி போலிருக்கிறது! இல்லாவிட்டால்னின் மனப்போக்கும். கோபதாபங்களும் அவருக்கு எப்படித் தெரியும்?

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து பல கோயில்களுக்கும் சென்று பிரார்த்தனை செய்த பிரதம மந்திரியைத் தமிழரசுக்கட்சியினர் எதிர்த்து சத்தியாக்கிரகம் செய்ததினால் கடவுளுக்குக்கோபமாம். இதனால் வடக்கிலே மழையில்லாமல் வரட்சி வாட்டுகிறதாம் இது நல்லூர் பிரதிநிதியின் அமுதவாக்கு. கடவுளுக்குத் தமிழரசுக்கட்சியிடம் கோபமென்றால் பிரதம மந்திரியிடம் கூடவா கோபமா? வழிபட்ட அவருடைய பக்தியை மெச்சியாவது வருண தேவனை யாழ்ப்பாணத்தின் பக்கம் அனுப்பக் கூடாதா? இதுதான் போகட்டும்!

சத்தியாகிரகம் செய்தது தமிழரசுக் கட்சியினர் மட்டும் தானே? யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் அனைவருமில்லையே? ஏதோ ஒரு சில தமிழரசுக்கட்சி சத்தியாக்கிரகிகள் மீது கோபம்கொண்ட கந்தவேள் யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்கள் அனைவரையும் ஏன் வதைத்து வாட்டுகிறார்? ஓகோ, சத்தியாக்கிரகம் செய்த ஒரு சில தமிழரசுக் கட்சித் தலைவர்கள் வட பகுதி தமிழ் மக்கள் அனைவருடையவும் உண்மையான பிரதிநிதிகள் என்பது கடவுளுக்குக்கூடத் தெரிந்துவிட்டது என்பதை திரு. அருளம்பலம் மறைமுகமாக சுட்டிக்காட்டுகிறாரோ என்னவோ யார் கண்டார்கள்!

—மித்திரன்—22-11-74

### சென்னையில்...

—1-ம் பக்கத் தொடர்

மகாபோதி கட்டிடத்துக்கும் செல்லவேயில்லையாம்!

சென்னையிலிருந்து வெளிவரும் இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏடு நவம்பர் 9ம் திகதி இதழில் இந்த விபரங்களைத் தந்துள்ளது. அச்செய்தி வருமாறு:-

"Special police protection has been provided for Sri Lanka Labour Minister Michael Poul De Souza who is now in the city, Police Commissioner K. R. Shenai told newsmen on friday.

The Sri Lanka Minister visited many shops in the city but not the Sri Lanka Deputy High Commissioners office or the Mahabodhi Society premises where there were bomb explosions recently according to Mr. Shenai.

Mr. Shenai said he did not know whether Mr. De Souza would be visiting these two places before he leaves the city on saturday evening!"

இது இப்படியிருக்க, சென்னை குண்டுவீச்சு சம்பவங்கள் தொடர்பாக, சசிகுமார், ஆனந்தன், ஆனந்தகுமார் ஆகிய மூன்று இளைஞர்களை சென்னைப்பொலிஸ் கைதுசெய்துள்ளனர்.

"இலங்கையில் இருக்கும் இந்திய வம்சாவளியினரின் பிரச்சினைகள் மீது இந்திய அரசின் கவனம் திருப்பப் படுவதற்காகவே இந்த நடவடிக்கைகளில் தாம் ஈடுபட்டதாக கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் தெரிவித்ததாக பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

---

### தமிழர் கூட்டணி தலைமைச் செயலகம் இடமாற்றம்!

தமிழர் கூட்டணியினதும் தமிழரசுக்கட்சியினதும் தலைமைச் செயலகம், 30-11-74இல் இருந்து யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள 238ம் இலக்கக் கட்டிடத்துக்கு இடம்மாறுகிறது. புதிய அலுவலகத்தை நாவலர் திரு. அ. அமிர்தலிங்கம் திறந்துவைப்பார்.

### மனிதஉரிமைகள் தின விழா!

மனித உரிமைகள் தின விழாவை எதிர்வரும் டிசெம்பர் 10ம் நாள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடத்துவதற்கு கொழும்பு ஆய்வுக்கழகம் ஏற்பாடுகள் செய்துள்ளது. சர்வ கட்சித்தலைவர்களும் இதில் உரையாற்றவிருக்கின்றனர். தமிழர் கூட்டணி சார்பில், நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம், மு. திருச்செல்வம் கியூ. சி. எம். எஸ். செல்லச்சாமி, வி. என். நவரத்தினம் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

### தமிழ் ஈழமும்...

—4ம் பக்கத் தொடர்

சோசலிச பாதையில் உருவாக்குங்கள். நாங்கள் தடையாக இருக்க மாட்டோம்.

நாங்கள் அயல் நாட்டவராக உங்களோடு ஒற்றுமையாக, நட்புறவு கொண்டு வாழவிரும்புகிறோம். நீங்கள் செல்லும் சிங்கள பௌத்த பாதையில் தடையாக இருக்க எங்களுக்கு விருப்பம் இல்லை. நீங்கள் சுதந்திர சிங்கள நாட்டை உருவாக்க வேண்டுமென்பதுதான் எமது விருப்பம். அப்படிச் செய்தால் நீங்கள் எங்களுக்குப் பொறுப்பாக இருக்க மாட்டீர்கள். எங்களுக்கு நாங்களே பொறுப்பாக இருப்போம். இரண்டு பகுதியினரும் பிராந்திய ரீதியில் சகல விஷயங்களையும் ஆராய்ந்து ஒற்றுமையாக இருக்கலாம் என்பதில் தடை இல்லை."

— தொடரும்.


ஒரே செலவில் நமக்கும் பிறர்க்கும்
நயம்வர வாய்ப்பான வழியை
நாடுதல் உத்தமமல்லவா?
நாடு நலம்பெற நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களை
வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்.

அதிபர்
மில்க் வைற் சவர்க்காரத் தொழிற்சாலை
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனிய விடுதலை இயக்கம்போல் தமிழர் விடுதலை இயக்கம் ஒன்று உருவாகுமா?

## திருமதி விவியன் குணவர்தன கேள்விக்கு மூதூர் தங்கத்துரையின் சூடான பதில்!

"பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினர் போன்று இயங்கவேண்டிய ஒரு சூழ்நிலை இங்கும் ஏற்படுமானல் நாமும் அதுபற்றி சிந்திக்க வேண்டியிருக்கும்!"

இவ்வாறு தேசிய அரசப்பேரவையில் வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது உரை நிகழ்த்திய மூதூர் பா. உ. திரு. அ. தங்கத்துரை முழக்கமிட்டார்.

திரு. தங்கத்துரையின் பேச்சின்போது குறுக்கிட்ட திருமதி விவியன் குணவர்த்தனவுக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் பேசுகையில் கூறியதாவது:—

7,500 சதுர மைல்களைக் கொண்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு-நாட்டின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் பணத்தில் 20ல் ஒரு பங்குகூட ஒதுக்கப்படவில்லை. எனவே அபிவிருத்தியிலும் தமிழ் பிரதேசங்களையும் தமிழ் மக்களையும் ஒதுக்கித்தள்ளும் நடவடிக்கைகளை அரசாங்கம் இனிமேலாவது கைவிடவேண்டும்.

தமிழ் பிரதேசங்களான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொழில் பேட்டைகளை நிறுவுவதிலும் அரசாங்கம் அக்கறை செலுத்தாமல் இருந்து வருகிறது. பல வருடங்களாக காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதாக அரசாங்கம் கூறி வந்த போதிலும் இதுவரை எதுவித உருப்படியான நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லை.

### இதுதான் சமதர்மமா?

எனது தொகுதியில் புதைபொருள் ஆராய்ச்சிக்காக 20,000 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதனுல் விவசாயத்துக்கு அத்தியாவசியம் தேவைப்படும் இந்த நிலங்கள் வெற்று நிலமாகவே கிடக்கின்றன.

சேருவில பௌத்த விகாரைக்கு 1000 ஏக்கர் காணி வழங்கப்படுகிறது. அத்துடன் அப்பகுதியை புனித நகரமாகப் பிரகடனம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதனுல் செல்லநகர், தோப்பு கிராமங்களில் வாழும் முஸ்லிம்களும் அப்புறப்படுத்தப்பட இருப்பதாகவும் தெரிகிறது.

குடியிருப்பதற்கும், விவசாயம் செய்வதற்கும் மக்களுக்குக் காணியைப் பகிர்ந்தளிப்பதற்கு மறுத்து விட்டு கடவுளுக்குக் காணி வழங்கும் இந்த நடவடிக்கை எவ்விதத்தில் சோசலிச நடவடிக்கையாகும்? மக்களுக்கு செய்யும் சேவையே மகேசனுக்குச் செய்யும் சேவை என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

### திட்டமிட்ட குடியேற்றம்

அரசாங்கம் திட்டமிட்டு திருகோணமலை மாவட்டத்தில் சிங்களவர்களை குடியேற்றி அங்குள்ள தமிழர்களை சிறுபான்மையினராக மாற்றுவதற்கு எடுக்கும் முயற்சிகளை நான் வன்மையாக கண்டிக்கிறேன். சிங்களவர் தமிழ் பகுதியில் தாங்களே விரும்பி குடியேறுவதை நாம் எதிர்க்கவில்லை. ஆனுல் அவர்களை பலவந்தமாக குடியேற்றும் முயற்சியில் அரசாங்கம் இறங்குவதையே நாம் எதிர்க்கிறேம்.

"நாடே இல்லாத பாலஸ்தீன் மக்களுக்கு நாடு கொடுக்க வேண்டும் என வாதிடும் இடதுசாரிகள் இந்த அரசாங்கத்தில் பொறுப்பான பதவிகளை வகிக்கின்றனர். இருந்தும் தமிழர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் மறுக்கின்றனர்.

திருமதி விவியன்:— "பி. எல்.ஒ. (பாலஸ்தீன விடுதலை இயக்கம்) போன்று டி. எல். ஒ. (தமிழர் விடுதலை இயக்கம்) ஒன்றை உருவாக்க விரும்புகிறீர்களா?"



திரு. தங்கத்துரை:- "அப்படியான நிலை ஏற்பட்டால் நாங்களும் அதுபற்றி சிந்திக்கவேண்டியிருக்கும்: 1833ம் ஆண்டுவரை தமிழர்கள் இந்த நாட்டில் தனியாட்சி நடத்திவந்துள்ளனர். ஆனும் வர்க்கமாக நாம் சிங்கள மக்களுடன் சரிசமமாக இருந்தவர்கள். பின்னர் அந்நியர் படை எடுப்புக் காரணமாக நாங்கள் ஆளப்படும் இனமாக்கப்பட்டோம். இன்றும் நாம் சிங்களமக்களுடன் சமமாக, நண்பர்களாக வாழவே விரும்புகிறேம். ஆனுல் அரசாங்கம் எங்களையும் மதித்து. இந்த நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் சமமாக நடத்தத் தயாராக இருக்கிறதா? இந்த நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் தங்கள் மனதில் விரக்தியையும், வெறுப்பையும் வளர்த்துக்கொண்டு இருந்தால் நாடு எப்படி முன்னேற முடியும்? இதனை ஏன் ஆட்சியிலுள்ளவர்கள் எண்ணிப்பார்க்க மறுக்கின்றனர்? தமிழர்கள் தங்களது உரிமை கிட்டும்வரை ஓயப்போவது இல்லை. அவர்கள் தொடர்ந்து போராடுவார்கள் என்பதை இச்சபையில் பகிரங்கமாகக் கூறிவைக்க விரும்புகிறேன்"

## ஸ்ரீமாவோவுக்கு ஒரு பகிரங்கக்கடிதம்

—2-ம் பக்கத் தொடர்

அவர்களை இன்று அலையவிட்டிருக்கிறீர்கள் வீதியில்!

அதன் பலன்?

உங்கள் நாடே—பகைமைக் கண்பொசுங்கி—வரட்சித் நிக்குளித்து நிற்கிறது!

இன்னல்கள் சூழ்ந்த நிலையிலும், இடைவிடாத தமிழர்களின் போராட்ட முரசின் ஒலி தங்கள் கணவரின் செவிப்பறையைத் துளைத்தெடுத்தது.

அதன் மூலம் பிறந்தது பண்டாரநாயகா — செல்வநாயகம் சமரச ஒப்பந்தம்.

உங்கள் கணவரின் உள்ளத்தில் உறங்கிய உண்மை விழித்துக்கொண்ட சமயம் அது!

ஆனுல் அடுத்து நடந்தது என்ன?

விழித்துக் கொண்ட உண்மை நடமாடத் தொடங்கியபோது, ஐநூறு புத்தபிட்சுக்களின் குண்டாந்தடியால் அந்த உண்மை படுகொலை செய்யப்பட்டது!

தங்கள் வீட்டின் கொல்லைப்புற வழியாகக் குண்டாந்தடி ஏந்திவந்த புத்த பிட்சுகளின் பயமுறுத்தல்களுக்கு அடிபணிந்த உங்கள் கணவர் அவரது கையெழுத்தை அவரே கிழித்தெறிந்தார்.

அப்போது பாராளுமன்றத்தில் கர்ச்சித்தான் சிங்கத் தமிழன் வன்னிய சிங்கம் உங்கள் கணவரை நேராகப் பார்த்து 'எந்த புத்த பிட்சுகளின் மிரட்டல்களுக்குப் பயந்து தமிழர்களின் உரிமை சாசனத்தைக் கிழித்து எறிந்தீர்களோ அதே புத்த பிட்சுக்களாலேயே நீங்கள் ஒரு நாள் கொல்லப்படுவீர்கள்.'

ஓ... உங்கள் கணவரின் முடிவுக்கு நான் கலங்கி நின்றேன் தாயே..

ஆனுல், வன்னிய சிங்கம் சொன்னதுதானே நடந்தது?

இதை — உண்மையைக் கொன்றதற்கு நீதிதந்த தண்டனை என்று கொள்ள

### 1958ம் ஆண்டு!

இந்த ஆண்டை நினைத்துப் பார்க்கிறேன்.

எமது கண்ணீர்க் குளம் உடைப்பெடுத்துக் கொள்கிறது!

கன்னங்களில் வழிந்தோடுவது வெறும் கண்ணீர் இல்லையம்மா நொந்துபோன உள்ளத்தில் ஏற்பட்ட விரிசலில் இருந்து பீறிட்டுப் பாயும் ரத்தம்!

### 1958

தமிழர்களின் ரத்த ஆறு மாய்ந்தோடிய ஆண்டு.

கணவனைப் பிரிந்து கைம்பெண்ணுகியவர்கள், மனைவியை இழந்து புத்தி பேதலித்தவர்கள் — பெற்றோரை இழந்து தேம்பித்திரிந்த சிறுர்கள் — குழந்தைகளைக் கொடுமையாளர்களின் வெறிக்குக் காவு கொடுத்துவிட்டு வெட்ட வெளியையே வெறித்து நோக்கிப் பைத்தியமானவர்கள்—

ரத்தத்தை வியர்வையாக்கி நாளெல்லாம் நரம்பு தெறிக்க உழைத்துச் சேர்த்த சொத்தை கொள்ளையர்களிடம் பறிகொடுத்துவிட்டு பரிதவித்து நின்றவர்கள்—

பட்டியல் போட்டால் பதறுதம்மா நெஞ்சம்!

இத்தனைக்கும் மேலாக இன்னுமொரு செய்தி—

எழுதவே என் கரம் நடுங்குகிறது.

மீண்டும் அதை எண்ணிப் பார்க்க இதயம் வலிக்கிறது..

மனிதனுக்கு தனது உடம்பில் எத்தனை வலிகள் உண்டோ அத்தனையும் மொத்த உருவெடுத்து என்னைக் குத்துவதுபோல் என் எளிய உடல் வேதனையால் துடிக்கிறது.

எத்தனையோ [illegible]களை ஈப்ருக்களுக்கு இட்லர் செய்தான் என்று எமக்கில்

வரப் படித்தவன் நான். ஆனுல்—

எனதருமைத் தமிழ்ப் பெண்களை, மானபங்கப் படுத்தி, மழலைக்கு பாலூட்டும் மார்பகத்தில் சிங்கள ஸ்ரீயை பொறித்து அனுப்பிய கொடுமையைக் கண்டபோது இட்லர் நல்லவனுகத் தெரிகிறுன்—என்னுடல் எரியும் மெழுகாய் உருகிப்போகிறது.

அம்மா—ஸ்ரீமா, நீங்களும் பெண்தானே உங்களுக்கு இந்த நிலை உருவானுல்—

உணர்ந்து பாருங்கள்— உங்கள் உதிரம் துருவப் பகுதியின் 'ஐஸ்'சாக மாறி விடும்!

இத்தனை கொடுமைகளையும் நீங்கள் அறியாதவரல்ல ஆனுலும் உங்கள் நினைவைத் துண்டுகிறேன்.

காரணம், நீங்கள் யாழ்ப்பாணத்தில் இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் மறந்துவிட்டதுபோல்பேசியிருப்பதால்!

உங்கள் கணவரின் மறைவுக்குப்பின் நீங்கள் பிரதமரானீர்கள் — சிங்கள மக்களின் ஆதரவைத்தேடினீர்கள்.

ஊர் ஊராக மேடை ஏறிவந்தீர்கள். மேடையில் ஏறியதும் —நீங்கள் பேசமாட்டீர்கள். உங்கள் கண்களில் இருந்து கண்ணீர் வெள்ளம் கரைபுரண்டு ஓடும்.

இரண்டொரு வார்த்தைகள் இடையே பேசுவீர்கள்.

"என் கணவரின் சபதங்களை நிறைவேற்றுவேன். தமிழை அழித்து சிங்கள மொழியையும்— சிங்களவர்களையும் காப்பாற்றுவேன்."

[illegible]

[illegible] கேளுங்கள், அது சொல்லும் உண்மையை.

உங்கள் கண்ணீருக்கு மக்கள் மயங்கினுர்கள்.

அதே நேரத்தில் தமிழர்களையும்—தமிழையும் அடியோடு அழித்து விடவும் முடிவுசெய்தார்கள்.

அந்த முடிவை எடுக்க வைத்தது உங்கள் கண்ணீர்த் துளிகள்.

நாடு அமைதியிழந்தது.. நலிவைத்தேடியது.

தமிழர்களை எச்சில் இலையைக்கொத்தித் திரியும் காக்கைகளைப்போல் கருதிச் சுட்டுக்கொன்றீர்கள்.

**அதற்குக் கடைசிச் சான்று யாழ்ப்பாணத்தில் நடந்த 'உலகத் தமிழ் விழா'ப் படுகொலைகள்!**

இன்னும் நடத்திக் கொண்டுதான் இருக்கிறீர்கள் உங்கள் வேட்டையை.

என்றுலும் யாழ்ப்பாணத்தில் "ஓநாய் வேதாந்தம்" பேசியிருக்கிறீர்கள்.

ஈழத் தமிழர்களின் உணர்வுகளை அழித்துவிட்டு — உரிமைகளைப் புதைத்து விட்டு — சத்தியத்திற்கு சமாதி கட்டிவிட்டு சுடுகாட்டு மேடையேறி நின்று கொண்டு சமாதானத் தூது விடுகிறீர்கள்.

சரித்திரத்தை சாம்பலென ஊதி மறைத்திட நினைக்கிறீர்கள்.. தவறு, சரித்திரம் உருக்குப்பாளங்களில் பொறிக்கப் பட்டுவிட்டது.

திருமதி. ஸ்ரீமாவோ அவர்களே! ஏன் உங்கள் மனதையே நீங்கள் ஏமாற்றிக் கொள்கிறீர்கள்?

போதும் உங்கள் பசுத்தோல் வேடம்.

தமிழர்களின்உரிமையைக் கொடுங்கள் அவர்கள் தங்கள் கடமையைச் செய்ய விடுங்கள்!

## நீலக்கட்சியினர் நிர்வாகத்தில் ஊழல்! ஊழல்!!

நிர்வாகச் சீர்கேடு காரணமாக திருகோணமலை கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை கலைக்கப்பட்டுவிட்டது. இதன் தலைவராக திருகோணமலை மாவட்ட சிறீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரான ஜனுப் எஸ். எம். ஏ. ஜமால்தீன் இருந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இதே போல யாழ். ப. நோ. கூ. சங்க இயக்குனர் சபையும் விரைவில் கலைக்கப்படுமா என்று கேட்கின்றனர், யாழ் நகரப்பொது மக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "உருவாக்கப்படவிருக்கும் 11 தொழிற்சாலைகளில் ஒன்றுகூட வடக்கு, கிழக்கில் இல்லை!

"பதினொரு புதிய தொழிற்சாலைகளை அமைக்க திட்டமிட்டிருப்பதாக நிதியமைச்சர் கூறியிருக்கிறார். ஆனால், வடக்கிலோ கிழக்கிலோ இதில் ஒன்று கூட அமைப்பதற்கு திட்டம் இல்லை!"

—இவ்வாறு வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய உடுப்பிட்டி பா. உ. திரு. க. ஜெயக்கொடி தெரிவித்தார்.



## வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் உடுப்பிட்டி பா. உ. முழக்கம்!

அவர் மேலும் பேசியதாவது:—

மக்களுடைய பிரதான சீவாதாரத் தேவைகள் உணவு, உடை, உறையுள் ஆகியனவாகும். இவை தவிர்ந்த இன்னும் வேறு குறைந்தபட்சம் அடிப்படைத் தேவைகளும் உள. அவைகளைப் பூர்த்தி செய்தால்தான் நாம் மனிதர்களாக வாழலாம். நாம் விரும்பும் முன்னேற்றத்தை எய்துவதற்கு பூர்வாங்கத் தேவையாக இருக்கின்ற அமைதி நாட்டிலே நிலவும். இந்தக் குறைந்த பட்சத் தேவைகளாவன— குழந்தைகளுக்கு வேண்டிய போஷணைச் சத்துள்ள உணவு, சுகாதார வசதிகள், நிலமில்லாத விவசாயிகளுக்குமனைக்கட்டு, கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பான குடிதண்ணீர், மின்சார வசதி முதலியனவாம்.

### அடிப்படைத் தேவைகள்

நம்நாடு எப்போதுமே வறிய நாடாக இருக்கவேண்டுமா என்ற கேள்வி எழுகின்றது. மண்வளமும் மூலவளங்களும் மலியப் பெற்றதோடு கற்றோர் தொகையும் அதிகரித்தது நம் நாடு. அப்படி இருந்தும் நம் மக்கள் ஆழ்ந்த வறுமையில் இருக்கிறார்கள்.

எம் இளைஞர்கள் வாழ்க்கை நடாத்துவதற்கு வேண்டிய தொழில் வாய்ப்புக்கள் பெறாமல் இருக்கிறார்கள். உணவுக்கும் வேறு அவசியப் பொருள்களுக்கும் நாம் பிற நாடுகளை நம்பியிருக்கின்றோம். நமக்கு வேண்டிய அளவு உடைகள் இல்லை. உள்ளனவற்றையும் நாம் இறக்குமதி செய்கிறோம்.

வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால் பொருளாதார அபிவிருத்தி இடம் பெற்றேயாக வேண்டும். இச்சாதனையை அடைய வேண்டுமானால் வேளாண்மைவிருத்தி, பால் உற்பத்தி அதிகரிப்பு, மீன்பிடித் தொழில் அபிவிருத்தி, தெங்குத் தொழில், தேயிலை இரப்பர் மறுசீரமைப்பு, மக்களின் நுகர்வுப் பொருட்களின் பெருக்கம் முதலியன கருமங்கள் இடம் பெற வேண்டும்.

உணவைப் பெறுவதற்கு ஏற்ற வழிகளைக்காண மூல வளங்களைப் பன்முகப்படுத்தும் முறையில் புதுவகை முதலீடுகளுக்கு முதன்மை கொடுக்கவேண்டும். தெளிவான நோக்கத்துடனும் நல்ல முடிவுகளைக் காணும் ஆற்றலுடனும், குறிப்பாக இன்றியமையாத நுகர்வுப் பொருள்களாகிய அரிசி, சீனி, தானியங்கள் கால்நடை, மீன் உற்பத்தி முதலியனவற்றில் வெற்றிகாணத் திட்டம் வகுக்கவேண்டும்.

### தடை முகாம் ஏன்?

நெல் சந்தைப்படுத்தும் சபை, நெல் உற்பத்தியாளர் வீடுகளுக்குச் சென்று நெல்லைக் கொள்வனவு செய்து உடனடியாகப் பணத்தையும் வழங்கினால் விவசாயிகள் தங்கள் நெல்லை வியாபாரிகளுக்கு விற்காமல் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கே விற்பார்கள். அத்துடன் விவசாயிகள் கொள்வனவு செய்யும் இடத்துக்குத் தங்களது நெல்லை எடுத்துச் செல்லவேண்டிய சிரமமும் இராது. அத்தோடு எடுத்துச் சென்ற நெல், சபையால் குறிக்கப்பட்ட தரத்துக்கு அமையாவிடில் அந்நெல்லை நிராகரிக்கும் நிலைமையையும் மாற்ற வேண்டும்.

அதை விடுத்து தடைமுகாம்களைப் போட்டு மாவட்டத்துக்கு மாவட்டம் நெல் எடுத்துச் செல்வதைத் தடுப்பதனாலே நெல் உற்பத்தி குறைவது மாத்திரமன்றி நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு நெல் விற்பார்கள் என்று நாம் நம்பவும் முடியாது.

இந்தவிடத்திலே கிளிநொச்சி, பரந்தன் முதலான இடங்களிலேயிருக்கின்ற விவசாயிகளுக்கு விசேட தடை விதிக்கப்பட்டிருப்பதைப் பற்றி நாங்கள் சிறிது யோசிக்க வேண்டியிருக்கிறது. ஆனையிறவிலே ஒரு மேலதிக தடைமுகாமும் அமைக்கப்பட்டிருக்கிறது. கிளிநொச்சி, பரந்தன் முதலிய இடங்களிலே நெல்லை விளைவிக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள் அந்த நெல்லைத் தங்கள் வீடுகளுக்குக் கொண்டு செல்லத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் த[illegible] விதிப்பதனாலே அவர்கள் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு அந்த நெல்லை விற்கிறார்களோ என்றால் அதுவுமில்லை.

### அரசு செவிசாய்க்கவில்லை

சட்டத்தை மீறிக் களவாக நெல்லைக் கொண்டு போய்ச் சேர்க்கவேண்டுமென்ற ஆசையினாலே அவர்கள் அந்த நெல்லைக்கொண்டு செல்கின்ற பொழுது, அதனால் பயனடைகின்றவர்கள் இத்தடை முகாம்களிலே இருக்கின்ற பொலிஸ்காரர்கள்தான். ஆகையினாலே இலங்கையின் எல்லா இடத்திற்கும் பொதுவாக உள்ளது போன்ற மாவட்டத்துக்கு மாவட்டம் இருக்கின்ற தடையைப் போலல்லாது ஏன் வடமாகாணத்திலே ஒரு மேலதிகமான தடை இருக்கவேண்டுமென்பதைச் சென்ற வரவுசெலவுத்திட்ட விவாதத்திலே நாம் சுட்டிக் காட்டியிருந்தோம். ஆனால், அரசாங்கம் ஏதோ காரணத்தினாலே அதுபற்றி இன்று வரை செவிசாய்க்கவில்லை.

### விவசாய அறிவற்றவருக்கு பதவி

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலே அரசியல் கட்சியொன்றின் அமைப்பாளராக இருக்கின்ற ஒரு தனிநபரை—தன்னுடைய சீவிய காலத்திலே ஓர் ஏக்கர் நிலத்திலாவது நெற்சாகுபடி செய்யாத ஒருவரை —விவசாயத்தைப் பற்றிய அறிவு எதுவுமில்லாத ஒருவரை—விவசாயச் சபையின் தலைவராக நியமித்திருக்கிறார்கள். அவரைப் பற்றிய அறிக்கையை அமைச்சரவர்கள் அரசாங்க அதிபரிடத்திலிருந்துகேட்ட பொழுது, அரசாங்க அதிபர் இந்த நபருக்கு விவசாய அறிவு எதுவுமில்லை என்று அறிவித்திருந்துங்கூட அரசியற் காரணங்களுக்காக அவரை அந்தச் சபையின் தலைவராக நியமித்திருக்கிறார்கள்.

அவர் அதன் தலைவர் மாத்திரமல்லாமல், ஏரிக்கரைப் பத்திரிகைகளின் வடபிரதேச முகாமையாளராகவும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் இருந்து இன்னும் எத்தனையோ அதிகாரங்களையும் தம்கையில் வைத்துக்கொண்டிருக்கின்றார். அளவுக்கு மிஞ்சிய இத்தனை அதிகாரங்களை ஒருவர் தம்பொறுப்பில் ஏற்றுக்கொண்டு ஒரு விடயத்தைத்தானும் திறம்படச் செய்யமுடியாத ஆற்றலற்றவராகக் காணப்படுகிறார்.

நிருவாகத்துறையிலே இருந்து போதிய அனுபவத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் தானும் இத்தகைய விடயங்களைப் போதிய திறமையுடன் செய்யாதிருக்கின்ற பொழுது ஒரு காலத்தில் பத்திரிகை நிருபராக இருந்த இளைஞரொருவர் இவ்வேலைகள் எல்லாவற்றையும் செய்யும்படி பொறுப்பிக்கப்பட்டால் விவசாயக் குழுவோ கூட்டுறவுச் சங்கங் [illegible] யில் செயல்படும் என்பதை இந்த அரசாங்கம் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

### சீனி உற்பத்திக்கு ஊக்கம் இல்லை

இலங்கைத் தீவைச் சுற்றியுள்ள சமுத்திரமானது போஷாக்குக்குத் தேவையான புரதம் நிறைந்த பொருள்களைக் கொண்டுள்ளது. எமது கடல்வளம் முற்று முழுதாகப் பயன்படுத்தப் படவில்லை. மீன்பிடிப்பு கணிசமான அளவு அதிகரிக்கப்படவில்லை.

சீனி விலை அதிகரிக்கப்பட்டிருப்பது மாத்திரமன்றி அதன் இறக்குமதியும் குறைக்கப்பட்டிருக்கின்றது. சீனி வறியவர்களுக்கும் ஓர் அவசியமான பொருளாகும். உள்நாட்டில் சீனியை உற்பத்தி செய்யப் பல வழிவகைகள் இருக்கின்றன. தோட்டத் தொழில் அமைச்சரால் பனைப் பிரயோசனங்களைப் பயன்படுத்தவென ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதன் பலனாகவே பனம் கட்டித் தொழிற்சாலைகள் பல அமைக்கப்பட்டன. ஒரு தொழிற்சாலையில் ஒருவர் அருமையான சிறந்த சீனியை உற்பத்தி செய்திருக்கின்றார்.

இவ்விதமாகசீனிஉற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு எந்தவிதமான ஊக்கமும் கொடுக்கப்படவில்லை. எதுவித அறிவோ அனுபவமோ ஆராய்ச்சியோ இல்லாதபல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடம் இன்று பனங்கட்டி உற்பத்தி ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. பனங்கட்டி, பனஞ்சீனி உற்பத்திக்கென தனியாகவே கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து பனஞ் சீனியையும் பனங்கட்டியையும் உற்பத்தி செய்ய அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### வீடமைப்பு

வீடமைப்புத் திட்டங்கள் வடபகுதியிலோ, கிழக்குப் பகுதியிலோ ஏற்படுத்தப்படவில்லை. ஏன் இந்தவிதமான பாரபட்சம் காட்டப்படல் வேண்டும் என்று எனக்கு விளங்கவில்லை.

என்னுடைய தொகுதியிலேயுள்ள பருத்தித்துறை BASE HOSPITAL இதிலே 1970ஆம் ஆண்டுக்குமுன்பே 'எக்ஸ்றே' அமைக்க வேண்டிய கட்டடம், சத்திர சிகிச்சைசெய்வதற்கு வேண்டிய கட்டடம் முதலியவற்றின் வேலைகள் எல்லாம் பூரணமாக முடிந்திருந்தும் இன்றுவரை, சத்திரசிகிச்சை செய்வதற்கான வைத்தியர் நியமிக்கப்படவில்லை; 'எக்ஸ்றே' கருவிகளும் அமைக்கப்படவில்லை.

தொழிற்சாலைகள் பற்றி நிதி அமைச்சர் வானொலி மூலம் பேசிய பேச்சிலே குறிப்பிட்டார். பதினொரு தொழிற்சாலைகளை அமைக்கத் திட்டம் இருப்பதாகக் கூறினார். ஆனால். வடக்கிலோ கிழக்கிலோ எந்தவொரு தொழிற்சாலையும் அமைக்கத் திட்டம் இல்லை. என்னுடைய தொகுதியிலே உள்ள வல்லிபுரத்தில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும்படி பல ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம். அதனை அமைப்பதற்கு அரசாங்கம் இன்னமும் முன்வரவில்லை!"

## தமிழ் ஈழத்தின் நீர் வளம்!

"யாழ்ப்பாணத்தில் நிலத்தின் அடியில் நீர் நிறைய உண்டு. ஆனாலும் மழையை எதிர்நோக்கி வருடம் ஒரு முறைதான் நெல் உற்பத்தி செய்கின்றனர். மேலும் கிணறுகள் தோண்டி நீர்ப்பாசன வசதிகள் செய்யப் படவேண்டும்! அப்போது தான் உணவுற்பத்தியை மேலும் பெருக்க ஏதுவாகும். நிலவளங்கள் நன்கு பயன்படுத்தப் படவேண்டும்!

—இவ்வாறு சங்கானையில் நடைபெற்ற ஐ. நா. தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய இலங்கையின் ஐ. நா. பிரதிநிதி திரு. பிரிஸ்டல் கூறியுள்ளார்.

இனவெறிபிடித்து தமிழ் ஈழத்தை ஒதுக்கி வரும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் காதில் இந்தப்போதனை எங்கே விழப்போகிறது?

## ஒளவையார் பேச்சைக் கேட்டிருந்தால்....!

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், ஒளவையார் என்ற மூதாட்டியொருவர் இருந்தார். அவர் ஒரு புலவர். பொருளாதார நிபுணர். பொருளாதாரத்தைப் பற்றி அவர் இயற்றிய ஒரு செய்யுளில் பின் வருமாறு கூறுகிறார்:-

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானமழிந்து மதிகெட்டு—போனதிசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு!"

இந்த வரவு செலவுத் திட்டத்திலே நிதியமைச்சர் 1,98,20,00,000 ரூபா கடன் வாங்கி அதன் மூலம் இந்த அரசை நடத்த உத்தேசித்திருக்கிறார். ஒளவையாரின் கூற்றிலே வருவாயிலும் பார்க்க செலவு கூடினால் என்னென்ன ஏற்படும் என்பது தெளிவாகக்கூறப்படுகிறது.

மானம் அழியும்; மதிகெடும்; போனதிசை எல்லோர்க்கும் கள்வனாக வேண்டிவரும்; ஒளவையாரின் கூற்றைப் பின் பற்றி நடந்தால் பிச்சைப் பாத்திரம் ஏந்தி சீனா ரஷியா போன்ற நாடுகளுக்கு கடன் கேட்டுப் போகவேண்டிய நிலையேற்பட்டிராது.

பொருளாதார நிபுணரான நிதியமைச்சர் அவர்களும் ஒளவையாரின் பொன்மொழிகளை பின்பற்றினால் நல்லதோர் அருமையான வரவு செலவுத்திட்டத்தை வகுத்திருக்கலாம்!

—வரவுசெலவுத் திட்ட விவாதத்தில் உடுப்பிட்டி பா. உ.

## மன்னார் மாவட்டத்தில் தமிழ்இளைஞர்பேரவை கிளைகள் துவக்கம்!

மன்னார் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராமங்களிலும் தமிழ் இளைஞர் பேரவையின் கிளைகள் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இம்மாதம் 15ம் திகதி முதல் 20ம் திகதி வரை வங்காலை, தலை மன்னார், பேசாலை, விடத்தல் தீவு, முருங்கன் அரிப்பு, மன்னார், நானாட்டான், அடம்பன் ஆகிய இடங்களில் பேரவையின் 10 கிளைகள் தொடங்கப் பட்டுள்ளன.

இக்கிளையமைப்பு வேலைகளில் திரு. அ. வரதராசன், திரு. கமிலஸ், திரு. ஜெயராசா ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

# வி. பி.யிடம் கேட்கிறோம்!

ஐந்து அம்சத்திட்டம், என்று கூறிக்கொண்டு ஏதோ ஒரு மாயாஜாலதேர்தல் செப்படிவித்தையை காங்கேசன்துறை தொகுதி மக்கள் முன்னிலையில் காட்டி வருகிறார் கம்யூனிஸ்டு தோழர் வி. பொன்னம்பலம்!

நாம் அவருக்கு சவால் விட்டுக்கேட்கிறோம்!

நீங்கள் முன்வைக்கும் 5அம்சத்திட்டம் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் மத்திய கமிட்டியால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, கட்சியின் திட்டத்தில் ஒன்ருகச் சேர்க்கப்பட்டிருக்கிறதா?

அப்படிச்சேர்க்கப்பட்டிருந்தால், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உங்கள் கம்யூனிஸ்ட் கட்சி அந்த ஐந்து அம்சத்திட்டத்தை நிறைவேற்ற இதுவரை எடுத்த நடவடிக்கைகள் என்ன?

அரசாங்க பாராளுமன்றக் குழுவிலோ — அரசியலமைப்பை உருவாக்குவதற்காக கூட்டப்பட்ட அரசியல் நிர்ணய சபையிலோ — அல்லது தேசிய அரசுப்பேரவையிலோ அல்லது அமைச்சரவை மட்டத்திலோ உங்கள் 5அம்சத்திட்டம் இதுவரை ஒரு தீர்மானமாக எப்போதாவது கொண்டுவரப்பட்டிருக்கிறதா?

அவ்வாறு ஏன் இதுவரை கொண்டுவரப்படவில்லை?

இப்போது காங்கேசன் துறையில் போய் நின்றுகொண்டு ஐந்து அம்சத் திட்டம் என்று ஜபம் செய்யும் நீங்களும் உங்கள் கட்சியும், அந்த ஜபத்தை உங்கள் ஈடிணையற்ற தலைவியாரான சிறிமா அம்மையார் முன்னர் நடத்துங்கள் பார்ப்போம்!

இப்போதுதான் நீங்கள் லெனினையும், அவர் காட்டிய பாதையையும் மறந்துவிட்டு சேலைத்தலைப்பே கதியென்று அதில் பிடித்து தொங்கிக்கொண்டு இருக்கிறீர்களே! பண்டாரநாயகா தானே இன்றைக்கு உங்களுக்கு லெனினையும்விட 'ஒசத்தி'!

அப்படிப்பட்ட நீங்கள்— உங்கள் 5அம்சத்திட்டத்தை அம்மாவின் காலடியில் சமர்ப்பித்து—அதைச்சட்டமாக்கிவிட்டு பின்னர் பாராளுமன்றக் கதிரைக்காக காங்கேசன் துறைத் தொகுதிக்கு போட்டியிடுவீர்களானல், உங்களை ஒரு 'வீராதிவீரர்' என்று கூறலாம்!

அதை விட்டுவிட்டு — தமிழர்களை கொத்தடிமை நிலைக்கு தள்ளியுள்ள அரசியல் சட்டத்தை ஆதரித்து அரசாங்கத்தின் சார்பில் போட்டியிட ஆவல் கொண்டுள்ள நீங்கள், எதற்காக ஐந்து அம்சத்திட்டம் என்று கூறிக்கொண்டு மக்களை ஏமாற்றுகிறீர்கள்?

முதுகெலும்பிருந்தால் — ஆண்மையிருந்தால்—கொஞ்சமாவது அரசியல் நேர்மை, கண்ணியம் இருந்தால், முதலில் உங்கள் 5அம்சத்திட்டத்தை பீட்டர் கெனமனிடம் சொல்லிப்பாராளுமன்றத்தில் சட்டமாக்குங்கள்!

அதன்பின்னர் இடைத்தேர்தலுக்கு வந்துபாருங்கள்! உங்கள் ஐந்து அம்சத் திட்டத்தையும் அடிமைத்தனமான அரசியல் அமைப்பையும் தமிழ் மக்கள் ஏற்கிருர்களா அல்லது எங்கள் தமிழ் ஈழ சுயாட்சிக் கொள்கையை தமிழ் மக்கள் ஏற்கிருர்களா என்று ஒரு கைபார்த்து விடுவோம்!

கோபித்துக் கொள்ளாதீர்கள்—இன்னுமொருவிடயம். உங்கள் 5அம்சத்திட்டத்தில் ஒன்று தமிழை வடக்கு, கிழக்கின் நிர்வாகமொழி ஆக்குவதாம். அப்படித்தானே!

இதே தேவையைப்பூர்த்தி செய்வதற்காக 1966ம் ஆண்டு தமிழ்மொழி விசேட விதிகள் சட்டம்கொண்டுவரப்பட்டபோது அதை எதிர்த்து கொழும்பில் ஊர்வலம் நடத்தி, தோசை வடை கோஷத்தை உங்கள் கட்சி கிளப்பியதே அது ஏன்?

தமிழை நிர்வாகமொழியாக்க வழிசெய்யும் அச்சட்டவிதிகளை அமுல் நடத்த மாட்டோம் என்று உங்கள் ஐக்கிய முன்னணி அரசு பகிரங்கமாக அறிவித்திருக்கிறதே அது ஏன்?

தயவுசெய்து இவற்றுக்கு பதில் சொல்வீர்களா?

—தமிழீழதாசன்

## உடுவில் பா. உ.வின் கூற்று உண்மையாகிறது!

நவம்பர் 27க்குப் பின்னர் கசெட் மூலம் விலைகள் அதிகரிக்கும் என்று உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் ஆருடம் கூறியிருந்தாரல்லவா? இதோ அவரது கூற்று உண்மையாகப்போகிறது. டாக்டர் என். எம். பின்வருமாறு கூறியிருக்கிருர்:-

"605 ஸ்டர்லிங் பவுணுக்கு ஒரு தொன் சீனியை வாங்கி தொடர்ந்து இருத்தல் 72 சதப்படி கொடுத்துக் கொண்டிருப்பதென்பது முடியாத காரியம். உலகச் சந்தையின் விலை ஏறி இறங்குவதை அனுசரித்தே இங்கும் சீனி விற்கப்படும்!!

—(வீரகேசரி 27-11-74)

## ஜெர்மன் பயணமானுர்

வவுனியா பா. உ. திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்கள் மேற்கு ஜெர்மன் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் 24-11-74ல் ஜெர்மனிக்கு பயணமானுர் ஜெர்மனி செல்லும் வழியில் ரோமாபுரிக்கும் அவர் செல்வார். ஜெர்மனியில் இரண்டு வாரங்கள் கழித்துவிட்டு, இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளுக்கும் விஜயம் செய்துவிட்டு அவர் நாடு திரும்புவார்.

2ம் திகதி முதல்—பிளாஸா திரையில்

கிங்ஸ்லி 7-வது வெற்றி வாரம்!

விஷ்ணுவர்தன், சந்திரகலா நடித்த-
சித்திராலயா அளிக்கும்

ஸ்ரீதரின் அலைகள்

6-வது வாரம்

கெப்பிட்டல்

சிவாஜி, லட்சுமி, விஜயகுமாரி, எஸ். வரலட்சுமி, முத்துராமன், சிவகுமார் நடித்த-

ராஜ ராஜ சோழன்

தென்னகத்திலேயே முதன்முதலாக தயாரித்த
''சினிமாஸ்கோப்'' தமிழ் வண்ணச் சித்திரம்.

இப்பொழுது காட்சியளிக்கிறது

வெலிங்டன்

சிவாஜி—வாணிஸ்ரீ நடித்த

வசந்த மாளிகை

(ஈஸ்ட்மென் கலர்)

8-வது கடைசி வாரம்

லிடோ [யாழ்நகர்]

சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த-

கே. பாலசந்தரின் எதிரொலி

இப்பொழுது எதிரொலிக்கிறது!

செல்லமகால் 8-வது வாரம்

சந்தர்ப்பம்— சூழ்நிலையினுல் குற்றம் செய்தவர்கள் அதன் பலாபலன்களின் எதிரொலிக்கு தப்பமாட்டார்கள் என்பதை விளக்கும் சிறந்த குடும்பச் சித்திரம்.

சிவாஜி, கே. ஆர். விஜயா, நாகேஷ்

எஸ். எஸ். ராஜேந்திரன்,
லட்சுமி - சிவகுமார் - ஜோதிலட்சுமி,
காலஞ்சென்ற ரீ. எஸ். பாலையா நடித்த-

கே. பாலசந்தரின் எதிரொலி

நீதிமன்ற வழக்கு விசாரணைக் கட்டங்கள் கட்டாயம் பார்க்கவேண்டியவை.

மலருக்கு மலர் தாவும் வண்டாக இருக்கவில்லை அவன்! மலர்களையே தன்னை நோக்கித் தாவச் செய்யும் மன்மதனுக விளங்கினுன்! முடிவு!

கெயிட்டியில் 4வது வாரம்

ரீங்காரமிடும் பொன் வண்டை தரிசியுங்கள்.

ஜெய்சங்கர், பாரதி,
மனோரமா, ஜெய்சித்ரா,
சுருளிராஜன், சோ நடித்த-

பொன் வண்டு

கேட்டு ரசிக்க வாருங்கள்:- யாருக்காக, இந்த மாளிகை ரத்ன மாளிகை! பாடியவர்:- மனோரமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] பண்டாரநாயகாமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் டிசம்பர் மாதம் 1-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.